# அறிஞர் பெர்னார்ட் ஷா

மு. வரதராசன்

# அறிஞர் பெர்னர்ட் ஷா

மு. வரதராசன்
தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி

விற்பனை உரிமை :

பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை

ரூ. 1 - 0 - 0

முதற் பதிப்பு : ஜூன் 1948

உரிமை ஆசிரியர்க்கு

Printed at the Sadhu Press, Royapettah, Madras
(P. I. C. No. 115)
for C.I.P. House, Madras. M.S. 459-B.—C. 1000—10-6-48

# முன்னுரை

விவேகானந்தர், இராமதீர்த்தர், தாகூர், காந்தியடிகள் முதலிய இந்நாட்டுப் பெரியார்களின் ஆங்கில நூல்களை விரும்பிக் கற்பது போலவே, இங்கிலாந்தின் அறிஞர்களுள் பெர்னார்ட் ஷா, எச். ஜி. வெல்ஸ், சி. இ. எம். ஜோட் ஆகியோர் எழுதியுள்ள நூல்களையும் விரும்பிக் கற்பது என் வழக்கம். பெர்னார்ட் ஷாவை நான் விரும்புவதற்குக் காரணம், வாழ்க்கைச் சிக்கல் எதுவாயினும் அதை மேற்போக்காகக் கண்டு மருந்திட்டுச் செல்லாமல், அடிப்படை கண்டு திருத்தும் ஆற்றல் அவருடைய எழுத்துக்களில் இருப்பதே ஆகும்.

என் இளைய நண்பர்கள் அவரைப் பற்றி அறியத் தணியா வேட்கை கொண்டு என்னை அணுகிப் பற்பல கேட்பது வழக்கம். அவர்களுக்காகவே நான் மேன்மேலும் ஷாவின் நூல்களைப் படிக்க நேர்ந்தது. அவரைப் பற்றித் தமிழில் ஒரு நூலும் இல்லையே என்று கூறி, ஒரு சிறு நூலேனும் எழுதுமாறு நண்பர்கள் வற்புறுத்தவும் தொடங்கினார்கள். அவர்களின் தூண்டுதலே இதை எழுதக் காரணமாக இருந்தது.

கடல் போல் விரிவான பலதிறக் கருத்துக்களைப் பற்பல நாடகங்களிலும் முகவுரைகளிலும் கட்டுரைகளிலும் எழுதிக் குவித்துள்ள அறிஞரைப் பற்றி இந்தச் சிறு நூல் போதாது என்னும் குறையை நன்கு உணர்கின்றேன். ஆயினும், விரிவான நூல்கள் எழுத அறிஞர் பலர் உள்ளமையால், இந்தச் சிறு முயற்சியையும் தமிழகம் ஏற்கும் என நம்புகின்றேன்.

மு. வ.

# அறிஞர் பெர்னாட் ஷா

### தள்ளாமை : தளராமை

இந்த நூற்றாண்டில் ஆங்கில மொழியின் வாயிலாக உலகமக்களுக்கு அறிவை வாரி வழங்கிப் புகழ்பெற்ற அறிஞர்களுள் தலைசிறந்தவர் இருவர் : ஒருவர் ஜார்ஜ் பெர்னாட் ஷா, மற்றொருவர் எச். ஜி. வெல்ஸ். இவர்களுள் அறிஞர் ஷா மூத்தவர்; அறிஞர் வெல்ஸ் இளையவர். "அறிஞர் பெர்னாட் ஷாவைப் போல் எழுத்தாளராக விளங்க வேண்டும் என்று இளமையில் ஆவல்கொண்டேன்" என்றும், "ஷாவின் மூளையைப் போல் என் மூளை ஆற்றல் மிக்கது அல்ல" என்றும் எச். ஜி. வெல்ஸ் தம் வரலாற்றில் எழுதியுள்ளார். இவ்வாறு வெல்ஸின் மதிப்பையும் பெற்று விளங்கிய ஷாவுக்கு இப்போது வயது 92; இன்னும் தம் சிற்றூரில் உடல்நலத்தோடும் அறிவுத் தெளிவோடும் வாழ்ந்துவருகின்றார்; உலகம் சீர்ப்படும் என்று நம்பி இன்னும் வழிகாட்டிவருகின்றார். அறிஞர் வெல்ஸ் வயதில் இளையவராயினும், நோய்வாய்ப்பட்டு வருந்தி லண்டனில் படுக்கையாய்க் கிடந்து போர்த் தொல்லைகளைக் கண்டு பெருமூச்சுவிட்டு எதிர்கால உலக அமைதியில் நம்பிக்கை குறைந்தவராய்த் தம் எழுபத்தொன்பதாம் வயதில் உயிர்நீத்தார்.

ரஸ்கின் என்னும் ஆங்கில நாட்டு அறிஞரும் நெடுங் காலம் வாழ்ந்தவர். ஆனால், தம் முதுமையில் உடல் கெட்டு உள்ளம் உடைந்து உலகத்திற்காகப் பெருந்துன்பம் உற்றுப் பித்தர் போல் மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். கார்லைல் என்னும் அறிஞரும் தம் இறுதி நாட்களில் நம்பிக்கை குலைந்து பெருந்துயரமே வடிவாய், காண்பவர் கவலைப்படத் தக்கவராய் அல்லல் உழந்தார். இன்னும் அறிஞர் பலர் முதுமையில் இவ்வாறே வருந்தியிருக்கின்றார்கள். ஆனால் பெர்னார்ட் ஷா தம் தொண்ணூற்றிரண்டாம் வயதிலும் நாள் தவறாமல் படிக்கின்றார்; உணவு உண்ணச் செல்லும்போதும் புத்தகமும் கையுமாகச் செல்கின்றார்; நாடகம் எழுதுகின்றார்; கடிதங்களுக்குத் தம் கையாலேயே பதில் எழுதுகின்றார்; அவற்றைத் தாமே தபால் நிலயத்திற்குக் கொண்டு செல்கின்றார்; தாம் கண்ட வழிகளின்படி உடல் ஓம்புகின்றார்; நாள்தோறும் உடல்நலத்திற்குரிய பயிற்சி செய்கின்றார்; உலக நிலையில் உள்ள சிக்கலைக் குறித்து யாராவது அணுகிக் கேட்டால் அறிவுடையோர் வியக்கத்தக்க முறையில் நுட்பமும் திட்பமும் சுவையும் மிக்க வகையில் விடை கூறுகின்றார்; தாம் எழுதிவந்த கொள்கைகளை இன்னும் விடாமல் நிலைநாட்டி விளக்கிவருகின்றார்; செய்யும் கடமைகளை யந்திரம் போல் தவறாமல் திருத்தமாகச்செய்து முடிக்கின்றார். கவலையில்லாமல் மகிழ்ச்சியோடு புன்முறுவலோடு விளங்குகின்றார்; இந்தத் தள்ளாத வயதிலும் அறிவாற்றல் ஒரு சிறிதும் தளராதவராய் வாழ்ந்துவருகின்றார். இதற்குக் காரணம் என்ன?

## நல்ல உடல்

மனிதனுடைய அறிவும் ஆற்றலும் எல்லாம் உடம்பில் உள்ளவை. உடல்நலம் உள்ள வரையில்தான் எவ்

வளவு சிறந்த அறிவும் ஆற்றலும் வாழ முடியும். மிகத் தூய்மையான பசுவின் பாலாக இருந்தாலும் வைக்கும் கலம் நன்றாக இருந்தால்தான் கெடாமலிருக்கும். கலம் தூய்மையற்றதானால், எவ்வளவு சிறந்த பசுவின்பாலும் கெடுவது இயல்பே. அதுபோலவே, எவ்வளவு உயர்ந்த அறிவாற்றல் இருந்தாலும் உடல் கெட்டால், அந்த உடலோடு சேர்ந்து படிப்படியாக அறிவாற்றலும் அழிய வேண்டியதுதான்.

அறிஞர் ஷா உடல் ஓம்புவதில் வல்லவர். இக்காலத்து மருத்துவ முறையும் அவரிடமிருந்து தப்பவில்லை. ஒரு நாடகத்தில் (Doctor's Dilemma) அவர் மருத்துவர்களின் குறைகளை அம்பலப்படுத்துகின்றார். என் பாட்டிக்குத் தெரிந்த பத்திய முறைகளும் இவர்களுக்குத் தெரியவில்லை என்றும், பச்சிலை மருத்துவனுடைய பழங்கால முறையைவிட இவர்களுடைய விஞ்ஞான முறை முற்போக்கு அடையவில்லை என்றும் வழக்கமான போக்கில் எழுதியுள்ளார். தம் அனுபவத்தால் ஆராய்ந்து உண்ணும் உணவிலும், பயிலும் பயிற்சியிலும் நல்ல முறைகளைக் கண்டு தவறாமல் கையாண்டு வருகின்றார். இந்த வயதிலும் நாள் தவறாமல் நீரில் கண்ணை வைத்துக் கழுவிக் கண்ணைக் காத்துவருகின்றார்; அதனால் மங்காத பார்வையும் பெற்றிருக்கின்றார். இவ்வாறு ஒவ்வொரு சிறு பழக்கத்தையும் ஆராய்ந்து நன்மை கடைப்பிடித்து உடலோம்புவதால், வாழ்நாளில் வளர்த்த அறிவும் ஆற்றலும் இன்னும் கெடாமல் இருந்துவருகின்றன. தொண்ணூறு வயதில் ஒருவர் நடப்பதே அருமை. ஆனால் ஷா நாள் தவறாமல் ஆறு மைல் தொலைவு நடப்பதை உடல்பயிற்சியாகக் கொண்டவர். அதனால்தான் தம் உடம்பில் வீண் சதை இல்லாமல் இயற்கையான நல்ல அமைப்பு இருக்கின்றது என்று நம்புகின்றார்.

தம் தொண்ணூறாவது வயதில் லண்டனில் உள்ள தம் வீட்டில் தடுமாறி விழுந்து காலடிபட்டுக் கிடந்த போது தமக்காக நடைபெற்ற ஒரு சிறப்புக் கூட்டத்திற்குப் போக முடியாமல் நேர்ந்தபோது அவருடைய பேச்சை ஒலிப்பதிவு செய்து கேட்கவைத்தார்கள். "என்னைப்போல் ஒருவர் தள்ளாமை உற்றபோது ஒரு குறை என்ன என்றால், தலை தடுமாறுவதற்கு முன்னே கால் தடுமாறுகின்றது. அதனால் அடிக்கடி கால் தடுக்கி விழ நேர்கின்றது. நான் வாரந்தோறும் மிக ஒழுங்காக மூன்று முறை தடுக்கி விழுகின்றேன்" என்று அந்தப் பேச்சில் குறிப்பிட்டார். கால்கள் தடுமாறும் நிலை வந்தும், அறிவு தடுமாறாமல், தெளிவாக உணர்ந்து சுவைபடப் பேசும் திறமை ஷாவிடம் விளங்கக் காண்கின்றோம். உடல் தளர்ந்ததே அல்லாமல் நோயால் கெடவில்லை. முதுமையால் கைகால்கள் வலிமை இழந்தனவே அல்லாமல், நாடி நரம்புகள் சீர்கெடவில்லை. இத்தகைய தூய உடம்பாக இருப்பதால், பாடுபட்டு வளர்த்த அறிவாற்றல் கெடாமல் காத்துக்கொள்ள முடிகின்றது; கவலைக்கு இடங்கொடுக்காமல் மகிழ்ச்சியாக வாழ முடிகின்றது.

## தெளிந்த அறிவு

மற்றொரு காரணமும் காண வேண்டும். மனிதனுக்கு அறிவு பரந்து விரிய விரிய, உணர்ச்சி குறையும்; அமைதியும் ஆற்றலுமே மிகுதியாகும். அதுவே பரந்த அறிவுக்கு அறிகுறி. பற்றுக்கொண்டு உலகத்தை உணரும் உணர்ச்சி அறிவை மறைக்கும், கெடுக்கும், கொல்லும். பற்றுக் கொள்ளாமல் உலகத்தை உணரும் உணர்வு அறிவை விளக்கும், வளர்க்கும், வாழ்விக்கும், பற்றுக்கொண்டு உணரும் உணர்ச்சியால் மனம் எழுச்சியும் வீழ்ச்சியுமாய் இயங்கித் தன் வேகத்தால் உடம்பையும் கெடுக்கும்.

இவ்வாறு உடல்நலத்திற்கும் ஊறாக இருப்பதால் அத்தகைய உணர்ச்சி நிலையை ஒருவகை நோய் என்றும் குறிப்பிட வேண்டும். பெருஞ் சினம், மிக்க காமம் முதலியவற்றையும் அறிஞர்கள் இவ்வாறே நோய்நிலை என்று ஒதுக்குகின்றார்கள். பற்றுக்கொள்ளாமல் உணரும் உணர்வு அறிவைத் தெளிவுபடுத்துகின்றது; ஐயமெல்லாம் தீர்த்து உண்மையை உணர்த்துகின்றது; உடம்பை ஒழுங்காக யந்திரம் போல் இயக்குகின்றது; ஆகையால் உடல்நலத்திற்கு உறுதுணையாக உதவுகின்றது. அறிஞர் ஷாவின் எழுத்துக்களைக் கூர்ந்து கற்றால், முன்குறித்த உணர்ச்சிக்கு இடம் இல்லாமையும் நல்லுணர்வும் தெளிந்த அறிவுமே எங்கும் கமழ்தலும் காணலாம். ஜெர்மனியின் குண்டுகள் லண்டன் மாநகரைத் துளைத்துக்கொண்டிருந்த காலத்திலும் லண்டன் தெருக்களில் தனியே திரியும் அஞ்சாமை அவருக்கு இயல்பாக இருந்தது. ஒருநாள் இரவில் மிக அண்மையில் குண்டு விழுந்து வெடித்ததாம். அதையும் கண்டாராம். உயிர்வாழ்வைப் பற்றிக் கவலை கொள்ளவில்லையாம். இளமையில் வறுமையின் நெருக்கடியில் சிக்குண்டிருந்தபோதும் தம் வாழ்வைப் பற்றிப் பெரிய கவலை கொள்ளவில்லை. அனுபவம் முதிர்ந்த பின்னும், உலக நிகழ்ச்சிகளைக் கண்டு மனம்உடைந்து தலையை உடைத்துக்கொள்ளவில்லை. தம் முகவுரைகளைச் சேர்த்து அச்சிட்ட ஒரு தொகுதிக்குத் தனி முகவுரை எழுதும்போது, " இந்த முகவுரைகள் செய்தித்தாள்களின் போக்கில் அவ்வப்போது இருந்த நிலைகளை ஒட்டி முப்பது ஆண்டுகளாக எழுதப்பட்டவை. ஆகையால் இப்போது உலகம் நாகரிகமாக முற்போக்கு அடைந்திருப்பது உண்மையானால் அவைகளில் பெரும்பாலானவை காலப்போக்கால் பயனற்றவைகளாகப் போயிருக்கவேண்டும். அந்தோ! உலகம் தேங்கிக்கிடக்கின்றது; இந்த முகவுரைகளோ இன்னும்

முற்போக்கு உடையவைகளாகக் கொள்ளப்பட்டு எதிர் காலத்தை நோக்கிநிற்கின்றன. இவற்றைப் படிக்கின்றவர்கள் பதினெட்டு வயதுள்ள இளைஞன் என்று என்னை எண்ணிக்கொள்ளக்கூடும். ஆனால் நானே எழுபத்தெட்டு வயது நிரம்பிய மூத்த முனிவன். என்காலத்தவர் பயனற்றவர்கள் என்று முன்னமே அவர்களைக் கைவிட்டு, எதிர்கால மக்கள் சிறந்தவர்களாக வரக்கூடும் என்று எதிர்பார்த்திருக்கின்றேன். இத்தகைய கதி என் முகவுரைகளுக்கு மட்டும் உரியது அல்ல. நம் இலக்கியத்தின் அறிவுத் தெளிவை ஒருபக்கம் கருதி, ஆள்வோரின் அறியாமையையும் வாக்குரிமை அளிக்கும் மக்களின் அறியாமையையும் மற்றொரு பக்கம் கருதி ஆராய்ந்தால், நூல்களைக் கற்கும் மக்கள் அவற்றால் ஒன்றும் புதிதாக அறிவதில்லை என்பதும் தம் தம் கருத்தையே அந்த நூல்களில் காண்கின்றார்கள் என்பதும் விளங்கிவிடும். இது வருந்தத் தக்க சான்றாக இருக்கின்றது. மக்களின் தவறுகளை எடுத்துக்காட்டி அவர்களுடைய கொடுமைகளை விளக்கி இடித்துரைக்கும் நூல்களைக் கற்றாலும், மக்கள் தம் தம் போக்கையே தெளிவுபடுத்திக்கொள்கின்றார்கள். ஆசிரியர்களின் கருத்துக்களைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதே இல்லை. இவ்வாறு பைபில் முதலான நூல்கள் அடைந்த கதியையே என் நூல்களும் அடைந்தன. இத்தகைய நிலையில் பல எடுத்துக்காட்டுக்களைக் கண்டிருந்தும், இவற்றை எழுதும் முயற்சியில் ஏன் ஈடுபட்டாய் என்று என்னை நீங்கள் கேட்கலாம். காரணம் எனக்குத் தெரியாது என்பதைத்தான் நான் விடையாகச் சொல்ல முடியும். இந்த முயற்சியைப் பொறுத்தவரையில் ஏன் என்ற கேள்விக்கு இடம் இல்லை. நான் எழுதவேண்டியிருந்தது; அவ்வளவுதான் உண்மை" என்று எழுதியுள்ளார். இவ்வாறு தம் சொந்த வாழ்விலும் உலகத்தொடர்பான வாழ்

விலும் கடமைகளை ஆராய்ந்து இடைவிடாமல் செய்து உழைத்து வருகின்றாரே அல்லாமல், அவற்றின் விளைவுகளாகிய நற்பயன்களையோ ஏமாற்றங்களையோ கண்டு மகிழ்ந்து கூத்தாடியதும் இல்லை, சோர்ந்து துயரமுற்றதும் இல்லை. அதனால்தான் அவர் இந்த முதுமையிலும் அமைதியான ஆற்றல் மிக்கவராகக் கடமைகளை ஒழுங்காகச் செய்து கவலையில்லாமல் வாழ முடிகின்றது.

## சமயக் கொள்கை

ஷா பிறந்த நாடாகிய அயர்லாந்தின் எழுத்தாளர் ஜே. எஸ். கால்லிஸ் என்பவர் கூறும் காரணமும் இங்குக் கருதத் தக்கது. பெரும்பாலான அறிஞர்கள் நம்பிக்கை வேறு, அறிந்த அறிவு வேறாகக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு வாழ்க்கையைப் பற்றிய ஐயங்கள் பல இருந்தன. தெளிவான உணர்வு இல்லை. ஆகையால் வாழ்க்கையின் இறுதியில் சார்பு உணர்ந்து பற்றத்தக்கது ஒன்றும் இல்லாமல் வாடினார்கள். ஆனால் ஷா உறுதியான பற்றுடன் சமயக்கொள்கை கொண்டிருக்கின்றார். அதன் அடிப்படை கொண்டு எல்லாவற்றையும் ஆராய்ந்து தெளிந்திருக்கின்றார். அதனால் இளமையில் கொண்டிருந்த உறுதி இன்னும் முதுமையால் தளராமல் நிலைபெற்றிருக்கின்றது என்று கால்லிஸ் கருதுகின்றார். ஷாவை உலகமெல்லாம் நாத்திகர் என்று கருதுகின்றது. அறிஞர் வெல்ஸும் தம்மைப் பற்றிச் சொல்லிக்கொள்ளும்போது "நான் ஷாவைப்போல் நாத்திகன்" என்று சொல்லிக் கொண்டார். அவ்வாறு இருக்கும்போது, ஷாவுக்குச் சமயமாவது, உறுதியாவது என்று வியப்படையலாம். ஷா உண்மையாகவே சமயப்பற்று உடையவர்; ஆனால் அவருடைய சமயம் தனிப்பட்டது. இயற்கையின் வரலாற்றை ஆராய்ந்து தெளிந்து, படைப்பின் கூர்தல் அறத்தையே

(Creative Evolution) சமயமாகக் கொண்டவர் அவர். வாழ்க்கையில் அழியாமல் விளங்கி எல்லோரையும் இயக்கும் சக்தி ஒன்று உள்ளது என்பதைத் அவர் 'மனிதனும் உயர்நிலைமனிதனும்' (Man and Superman) 'திரும்பவும் மெதுசெலாவுக்கு' (Back to Methuselah) என்னும் நாடகங்களிலும் சில முகவுரைகளிலும் தெளிவாக விளக்கியுள்ளார். அந்தச் சக்தியை உயிராற்றல் (Life Force) என்றும் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

சமயநெறி இல்லாதவரின் வாழ்க்கை பயனற்றுப் போகும் என்பதும், மக்கள் சமயநெறி உடையவர்களாக இருந்தால்தான் ஒரு நாட்டின் ஆட்சியும் நன்கு அமைய முடியும் என்பதும் அவருடைய கொள்கைகள். எதிலும் நம்பிக்கை அற்ற மக்களை ஆள முடியாது என்றும், அறிவாராய்ச்சியை ஓர் எல்லை வரைக்கும் கொண்டு தெளிந்த பின் நம்பிக்கையில் உறுதி பெற வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றார். ஆனல் சமயத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு கொள்கைகளை எல்லாம் கைவிட்டு மக்கள் வாழும் வாழ்க்கையைக் கடிந்து எழுதுவதில், அவர் மிகக் கடுமையானவர். அதைக் கண்டு சமயத்திற்குப் பகையானவர் என்று பலரும் எண்ணுகின்றனர்கள். அது உண்மை அல்ல. மூடநம்பிக்கைக்கே அவர் பகைவர். கண்மூடி வாழ்க்கைக்கே அவர் பகைவர். ஏசுகிறிஸ்துவினிடம் அவருக்குப் பெருமதிப்பு உண்டு. ஆனல் அவரிடமும் சில குறை கூறுவார். எனினும் அவருடைய அறவுரைகள் பல உண்மையானவை என்று நம்புகின்றனர். 1916-ம் ஆண்டில் ஆன்ட்ரகில்ஸும் சிங்கமும் (Androcles and the Lion) என்னும் நாடகத்திற்கு முகவுரை எழுதிய போது, "ஏசுகிறிஸ்து இன்று செயல்முறையில் அரசியலாளராக இருந்து வழி கூறுவாரானல், உலகத் துன்

பத்தைப் போக்குவதற்கு அதைவிடச் சிறந்த வழி இருக்க முடியாது. ஏறக்குறைய அறுபது ஆண்டுகளாக உலகத்தைப் பற்றியும் மக்கள் இயல்பைக் குறித்தும் நான் எண்ணி யுணர்ந்ததன் பயனாகவே இவ்வாறு கருதுகின்றேன்'' என்று குறிப்பிட்டுள்ளார். உலகத்தில் சமய நெறி உடையவர் பலர் என்றும், இல்லாதவர் சிலர் என்றும் கருதுவது தவறு என்கின்றார். சமயத்தைப் போற்றுவோர் (ஆத்மீகர்) மிகச் சிலரே என்றும், சமயத்தைப் புறக்கணித்து உலகப்போக்கில் அழுந்தியுள்ளவரே (லௌகீகர்) பலர் என்றும் விளக்குகின்றார். பழக்கவழக்கத்தின் காரணமாகக் கண்மூடிப் பின்பற்றும் நீதி முறைகளை அவர் மதிப்பதில்லை. மனச்சான்றுக்கு மாறாக நடக்கக் கூடாது என்பதே அவர் கொள்கை. மனச்சான்று தலையெடுக்காதபடி பெரும்பாலான மக்கள் வாழ்வதைக் கடிகின்றார். வேட்டை, விளையாட்டு, போர், வாணிகம் முதலிய எந்தக் காரணம் பற்றியும் கொலையும் இன்னாசெய்தலும் இருக்கக்கூடாது என்று வன்மையாகக் கடிந்து எழுதுகின்றவர் ஷா; தீமை செய்தவனுக்கு அதற்கு ஈடாகத் தீமை செய்து பழி வாங்க முயல்வதால் அவனுடைய மனச்சான்றை அப்போதைக்கு அழித்துவிடுகின்றோம் என்றும், பழிக்குப் பழி வாங்கல் என்பது கொடிய செயல் என்றும் அவர் விளக்கும்போது கிறிஸ்துவின் மணிமொழிகள் நினைவுக்கு வருகின்றன. தம் இரண்டாவது நாவலைப் பற்றி முகவுரை எழுதி வெளியிடும்போது, "இன்னது என்று அறியப்படாத ஏதோ ஒரு சக்தி என்னுள் இருந்து இதை எழுதுமாறு தூண்டியது. இதைப் படிப்பவர்களில் சிலரை அந்தச் சக்தி இயக்கி ஏதாவது பயன்பெறச் செய்யக் கூடும் என்றே இதை வெளியிடுகிறேன். தொடக்க முயற்சியாகிய இந்த நூல் உதவாச் சரக்குத்தான் என்பதை உணர்ந்தும் நான்

இதை வெளியிடக் காரணம் இதுவே" என்று எழுதியுள்ளார். எதிர்காலத்தில் உயிராற்றல் (Life Force) என்னும் அந்தச் சக்தியைப் பற்றிய கலை சமயநெறியாகப் பரவும் என்றும் அவர் நம்புகின்றார். இவற்றை எல்லாம் உணர்ந்தால், அறிஞர் ஷா அறிவாராய்ச்சிக்கு இயைந்த சில நம்பிக்கைகளை உடையவர் என்பதும், பண்பட்ட மனச்சான்று உடையவர் என்பதும் விளங்கும். இத்தகைய சமய உணர்வாலேயே அவர் 'முதுமையிலும் சோர்ந்து கலங்காமல் உறுதியாக வாழ்க்கையை நடத்த முடிகின்றது' என்று கால்லிஸ் கருதுகின்றார்.

## கவலை அற்ற வாழ்வு

நல்ல உடல், சிறந்த அறிவு, தெளிந்த நம்பிக்கை இம் மூன்றும் ஷாவின் முதுமையில் நாம் கண்டு வியக்கத் தக்கவைகளாக உள்ளன. இவற்றோடு மற்றொரு சிறந்த பண்பும் அவரிடம் காணலாம். மரணத்தைக் குறித்து ஒரு சிறிதும் கவலைப்படாமலும் அஞ்சாமலும் அவர் வாழ்ந்து வருகின்றார். எல்லா உயிரும் சேர்ந்ததே உயிராற்றல் என்னும் அந்தப் பெருஞ் சக்தி என்று அவர் நம்புவதால், அச் சக்தி ஓர் உடம்பில் நெடுங்காலம் கிடந்து முதுமையில் பயனற்றிருப்பதைவிட அந்த உடம்பை விட்டு மற்றொரு புதிய உடம்பில் அடுத்தடுத்து வாழ்வு பெறுதல் நல்லது என்று அவர் கருதுகின்றார். ஆயினும் 'திரும்பவும் மெதுசெலாவுக்கு' (Back to Methuselah) என்ற நாடகத்தில் மனிதனுக்கு இப்போது உள்ள ஆயுள் போதாது என்றும், மனிதன் சாகும்போது குழந்தை போல் போதிய அறிவு பெறாத நிலையிலிருந்தே சாகின்றான் என்றும், அதனால் அரசியல் முதலியவற்றில் போதிய முன்னேற்றம் அடையாமல் இடர்ப்படுகின்றான் என்றும் குறிக்கின்றார். முந்நூறு ஆண்டுகள் வாழும் மக்கள் எதிர்காலத்தில்

இருப்பார்கள் என்றும், ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழும் வாழ்வும் கிட்டும் என்றும் அந்த நாடகத்தில் புலப்படுத்துகின்ருர். ஆனல் அவர் தம் ஆயுளைப் பற்றியோ மரணத்தைப் பற்றியோ சிறிதும் கவலை கொள்ளவில்லை. வெளியூருக்குச் சென்று மேற்கொண்ட வேலையை முடித்தவர்கள் அடுத்த வண்டியை எதிர்பார்த்திருப்பது போல் அவர் கவலையற்றவராய் இருக்கின்ருர்.

தம் வாழ்வைப் பற்றிக் கவலைகொள்ளாதது போலவே தம் நூல்கள் நெடுங்காலம் நிலைபெறவேண்டும் என்பது பற்றியும் அவர் கவலைகொள்ளவில்லை. அதற்கு மாருக, இளமையில் எழுதிய நூல்கள் இன்னும் பயன்படக்கூடிய முறையில் உலகம் திருந்தாமலிருக்கின்றதே என்றுதான் கவலைகொள்கின்ருர். "என் வயதில் என்னுல் செய்ய முடிந்த அளவும் செய்துகொண்டிருக்கின்றேன். என் ஆற்றலும் குறைந்துவருகின்றது. நான் சீர்திருத்த முறையில் அளவு கடந்து செல்வதைக் கண்டவர்கள் என் ஆற்றல் குறைவதைக் கண்டு மகிழ்ச்சியும் கொள்ளலாம். ஆனல் நான் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பது வேறு; இனிவரும் இளைஞர்கள் இன்னும் பொருத்தமானவைகளையும் சிறப்பானவைகளையும் எழுதி, விரைவில் என் நூல்களைப் பின்னுக்குத் தள்ளுவார்கள் என நம்புகின்றேன்" என்று 'திரும்பவும் மெதுசெலாவுக்கு' என்னும் நாடகத்தின் முகவுரையிலும், "இந்த நாடகம் ஒரு சிறிதும் நடிக்க முடியாததாகவும் நடித்தாலும் பொருள் விளங்க முடியாததாகவும் உலகம் திருந்தியமையும் நல்ல காலம் வர வேண்டும் என்று மனமார விரும்புகின்றேன்" என்று 'மனைவியிழந்தவரின் மனைகள்' (Widower's Houses) என்ற நாடகத்தின் முகவுரையிலும் எழுதியுள்ளார். தாம் இறந்த பிறகும் தம் நூல்களால் புகழ் நிலைக்கவேண்டும் என்ற ஆசை அவரிடம் அறவே இல்லை. கலைக்காகக்

கலை வேண்டும் என்ற பொருளற்ற கொள்கையைப் போற்றாமல், சமுதாய வாழ்வையே நோக்கமாகக் கொண்டு அவர் எழுதுவதே அதற்குக் காரணமாகும். "கலையின் பொருட்டாகவே கலை வேண்டும் என்று நான் எண்ணியிருப்பேனானால், ஒரு சிறு வரி எழுதும் தொல்லையையும் மேற்கொண்டிருக்கமாட்டேன்" என்று குறிப்பிட்டிருக்கின்றார். இவ்வாறு சமுதாய அமைப்பைத் திருத்தும் நோக்கத்தோடு வாழ்நாள் எல்லாம் பாடுபட்ட அவர் இப்போது தம் திறமை எல்லாம் கொண்டு தம் கடமையை இயன்ற அளவும் நன்றாகச் செய்துமுடித்திருப்பதாக மன நிறைவு கொண்டு கவலையற்று அமைதியாக இருக்கின்றார். ஓர் இயக்கத்திற்கு ஆதரவு காட்டுமாறு சென்ற ஆண்டில் ஓர் அழைப்பு வந்தபோது, "அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுள்ள தொண்ணூறு வயதுள்ள கிழவனுக்கு இவ்வாறு அழைப்புக்கள் அனுப்புவதால் உங்களுடைய காலமும் ஆற்றலுமே வீணாகும். இந்தக் கிழவனுடைய பெயரைச் சேர்த்துக்கொள்வதால் உங்களுக்குத் தனிச் சிறப்பும் ஏற்பட்டுவிடாது. ஆகையால் உங்கள் கணக்கிலிருந்து என் பெயரைக் காலஞ்சென்றதாகக் கருதி எடுத்துவிடுங்கள்" என்று மறுமொழி எழுதினார். இதிலிருந்து அவருடைய மனநிலை புலனாகும்.

## உழைப்பு : ஓய்வு

ஷா இளமையிலும் இன்பத்தைத் தேடி அலைந்ததில்லை. இப்போதும் இன்பத்தை நாடுவதில்லை. "இன்பமாக இருக்கின்றோமா இல்லையா என்று எண்ணிப்பார்க்க ஓய்வு கிடைப்பதுதான் துன்பம். அதற்கு மருந்து ஓய்வற்ற உழைப்புத்தான். ஆகவே உழைப்பால் களைப்பு அடைகின்றவர்களே இன்பம் அடைகின்றவர்கள், உழைப்புக் குறைந்தவர்களுக்கு ஓய்வுநாள் (விடுமுறைநாள்)

துன்பமாகத் தோன்றும். நரகத்தை விளக்கிக் கூறவேண்டு மானால் அது எந்நாளும் விடுமுறைநாளாக இருக்கும் ஓய்வு என்று கூறலாம்'' என்பது அவர் கருத்து. தம் தொண்ணூறும் பிறந்த நாளன்று விடுத்த செய்தியிலும், "என் வாழ்க்கையில் நான் உற்றவைகளை எல்லாம் நீங்கள் அறிவீர்களானால், அத்தகைய வாழ்க்கை உங்களுக்கு நேராமல் இறைவன் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக்கொள்வீர்கள். ஆனால் இன்ப வாழ்க்கை வாழ்வது ஒரு கலை. நீங்கள் விரும்புவதை ஓயாமல் செய்து உழைத்துக்கொண்டு, இன்பமா இல்லையா என்று எண்ணிப் பார்க்க நேரமில்லாமல் வாழ்வதே இன்பவாழ்க்கைக்கு வழியாகும். என் வாழ்நாள் முழுதும் நான் அப்படித்தான் இருந்துவருகிறேன்'' என்று அறிவித்தார்.

1943-ம் ஆண்டில் மனைவி இறந்ததுமுதல் ஷா தனியாகவே வாழ்ந்துவருகின்றார். லண்டனிலிருந்து முப்பது மைல் தொலைவில் உள்ள செயின்ட் அயாட் லாரென்ஸ் என்னும் சிறு கிராமத்தில் உள்ள வீட்டில் தனியாக உற்றார் உறவினர் இல்லாமல் வாழ்ந்துவருகின்றார். கவலையில்லாமல் தம் வாழ்வைத் தாமே கவனித்துக்கொள்கின்றார். அவருடைய அடுத்த வீட்டார் நெருங்கிப் பழகுகின்றார்கள். மாலைநேரங்களில் அவர்களுடன் கலந்து பேசி மகிழ்கின்றார். ஆனால் அவர்களும் மிகுதியாக ஈடுபட்டு உதவிசெய்ய ஷா இடந்தருவதில்லை. அவருடைய செயலாளராகிய அம்மையார் லண்டனில் இருக்கின்றார். எழுதவேண்டிய கடிதங்களை ஷா தம் கையாலேயே எழுதித் தாமே தபால் நிலையத்திற்குக் கொண்டுபோய்ப் போடுகின்றார். விரிவாக எழுதவேண்டிய செய்தித்தாள் அறிக்கை, நாடகம் முதலியவற்றை மட்டும் சுருக்கெழுத்தால் எழுதி லண்டனில் உள்ள செயலாளர்க்கு அனுப்புகின்றார்; அவற்றை அந்த அம்மையார் டைப் அடித்து

அனுப்பியபின் ஒருமுறை பார்த்து அச்சுக்கு அனுப்புகின்ருர். முப்பது ஆண்டுகளாக அவர் ஷாவின் செயலாளராக இருந்து இவ்வாறு அவரிடம் தொழில் செய்துவருகின்ருர். ஆனல் ஒரு கடிதமாவது ஒரு நாடகமாவது இதுவரையில் நேரில் இருந்து சொல்லக்கேட்டு எழுதும் வாய்ப்பு இருந்ததில்லையாம். இவ்வளவு ஒழுங்காகத் தம் வாழ்க்கையை அமைத்துக்கொண்டு அந்தச் சிறு கிராமத்தில் ஷா தனியே வாழ்ந்துவருகின்ருர். உலகமெல்லாம் போற்றுமாறு நாடகங்கள் பல எழுதி அறிவுலகத்தைக் கலக்கிவரும் இந்த அறிஞர் வாழும் அந்தச் சிற்றூரில் ஒரு சினிமாக் கொட்டகையும் இல்லை. வாழும் வீட்டை நாட்டிற்காகவும் உள்ள செல்வத்தை ஆங்கிலமொழியின் ஆக்கத்திற்காகவும் எழுதி வைத்துவிட்டு மனைவி மக்கள் உறவினர் முதலான எவர் துணையும் இல்லாமல் வாழ்ந்துவருகின்ருர்.

## பிறப்பு, வளர்ப்பு

அயர்லாந்தின் தலைநகரான டப்ளினில் 1856 ஜூலை 26-ல் பிறந்தவர் ஜார்ஜ் பெர்னர்ட் ஷா. அவருடைய தந்தை பொறுப்பற்ற வாழ்க்கை நடத்திய குடிகாரர்; ஆயினும் நல்வாழ்க்கையில் வேட்கையுடையவர்; பிறரோடு இயைந்து நடக்க விரும்பி வாழ்ந்தவர். இசைக் கலையிலும் அவருக்குப் பயிற்சி இருந்தது. அவருடைய மனைவி (பெர்னர்ட் ஷாவின் தாய்) பொருமை பகை முதலிய தீய உணர்ச்சிகளுக்கு இடம் தராதவர்; ஆயினும் கணவருடைய குடிப்பழக்கம் அந்த நல்ல மனத்தைத் திடுக்கிடச் செய்தது; நாளடைவில் கணவரை விட்டுத் தனியே பிரிந்து வாழவும் செய்துவிட்டது. அப்போது அந்தக் குடும்பத்தில் இருந்த குழந்தைகள் பெண்கள் இரண்டும் ஆண் ஒன்றும். பெண்கள் இருவரும் பெரியவர்கள்; அவர்களுக்கு இளையவனுக இருந்த பையன்தான் ஜார்ஜ்

பெர்னார்ட். "எங்கள் குடும்பத்தில் தந்தை கவலை அற்றவர்; தாய் யாரையும் கடிந்து திருத்தும் ஆற்றல் அற்றவள். குடும்பத்தில் அன்பும் இல்லை, பகையும் இல்லை, அச்சமும் இல்லை, மதிப்பும் இல்லை. குழந்தைகளை வழிப்படுத்தி வளர்க்கும் முயற்சியும் இல்லை. தாய் ஒருவழி, தந்தை ஒருவழி; மக்களாக இருந்த நாங்களும் ஆளுக்கு ஒரு வழியில் வளர்ந்துவந்தோம்" என்று அறிஞர் ஷாவே எழுதியுள்ளார்.

சுற்றுப்புறத்தாரோடு மதிப்பாகப் பழகுவதையும் உறவினர் வீடுகளுக்குச் சென்று அளவளாவுவதையும் இந்தக் குடும்பம் இழந்துவிட்டது. ஜார்ஜ் கார் ஷாவின் குடிப்பழக்கமே அவரை எல்லோரும் புறக்கணிக்கக் காரணமாக இருந்தது. கணவருடைய தவறு மனைவிக்கும் மதிப்பு இல்லாமல் செய்துவிட்டது. அந்த அம்மாவையும் எந்தச் சிறப்புக்கும் எந்த வீட்டாரும் அழைக்காமல் புறக்கணித்துவிட்டார்கள். உறவினர் வீட்டிற்குப் பெற்றோருடன் போய் வந்ததாக ஒரு நிகழ்ச்சியும் நினைவில் இல்லை என்று அவர்களுடைய மகனார் ஷா குறித்துள்ளார்.

## குடும்பம்: பிளவு, பிரிவு

தந்தைக்கு வந்த வருவாயைக் கொண்டு குடும்பத்தை எப்படியாவது நடத்தி மக்களைப் படிக்கவைத்திருக்க முடியும். ஆனால் குடிப்பழக்கம் இடையூறாக இருந்து வருவாயைச் சுரண்டியது ஒரு புறம்; மற்றவர்களுக்கு நிகராக வாழ்க்கை நடத்தவேண்டும் என்று போலி மதிப்புக்கொண்டு சிக்கனத்தைப் புறக்கணித்தது மற்றொரு புறம்; இந்த இருவகையாலும் குடும்பத்தில் பொருளாதார நெருக்கடி முதிர்ந்தது. ஷாவின் தாய்க்கு இசையில் பயிற்சியும் திறமையும் இருந்தன. அந்த இசையே குடும்பத்தைக் காக்க உதவியது. இசை ஆசிரியர் ஒருவரின்

உதவி குடும்பத்திற்குக் கிடைத்தது. வீடு இசையரங்காக மெல்ல மெல்ல மாறியது. அறிஞர் ஷா இளமையிலேயே இசைக்கலை பயின்றார். இசை ஒன்றே இளமையில் குடும்பச் சொத்தாக இருந்த காரணத்தால், பிற்காலத்திலும் அவர் இசைக்கலையில் ஆராய்ச்சி மிக்கவராக விளங்கினர். தாயும் தந்தையும் போலவே மக்களும் இசையில் தேர்ச்சிபெற்றார்கள். 1872-ம் ஆண்டில் அந்த இசை ஆசிரியர் லண்டன் மாநகருக்குச் சென்று சேர்ந்தபோது, ஷாவின் தாய் தம் பெண்மக்களை அழைத்துக்கொண்டு தாய்நாட்டை விட்டு இங்கிலாந்தின் தலைநகருக்கே போய் வாழ்க்கையைத் தொடங்கினர். குடும்பம் இவ்வாறு பிளவுபட்டபோது, ஷா தம் தந்தையோடு டப்ளினில் தங்கும்படியாக நேர்ந்தது. தாயைப் பிரிந்த மகன் இசைக் கலையால் பெற்ற இன்பத்தையும் பிரிய நேர்ந்தது; ஆயினும் தனித்திருந்து தாமே இசை பயிலத் தொடங்கினர்.

தந்தை சர்க்கார் தொழிலில் இருந்தவர். அந்தத் தொழில் மிகையானது என்று அரசியலார் ஆட்களைக் குறைத்தபோது அவர் தொழிலில்லாமல் வெளியேற நேர்ந்தது. ஆயினும் ஒருவகையாக ஈடு செய்வதற்காக ஓய்வுச் சம்பளம் (பென்ஷன்) கொடுத்தார்கள்; அதை அவர் உடனே விற்றுவிட்டு, கிடைத்த பணத்தைக் கொண்டு ஒருவரோடு கூட்டுச் சேர்ந்து பெருத்த வியாபாரம் செய்யத் தொடங்கினர். ஒரு மாவுமில்லும் வைத்து நடத்தினர். அறிஞர் ஷா சிறுவனாக இருந்தபோது தந்தையோடு அடிக்கடி அந்த மில்லுக்குப் போய்வந்த நினைவு இருக்கின்றதாம். இந்த வியாபாரம் முதலியவற்றையும் தந்தை பொறுப்போடு கவனித்து நடத்தாமல் மற்றவர்களின் கையில் விட்ட காரணத்தால் அவை எப்படியோ ஒருவகையாக நடந்து வந்தன; அவ்வளவே அல்லாமல் செழிக்கவில்லை. " அவர்

கள் அந்தத் தொழிலை நடத்தவில்லை; அந்தத் தொழிலே அவர்களை நடத்திவந்தது" என்று அறிஞர் ஷா குறித்திருக்கின்றார். நெருக்கடியும் நேர்ந்தது. ஆனால் தந்தை கண்ணீர்விட்டுக் கலங்கவில்லை; ஒரு மூலையில் உட்கார்ந்து சிரித்துப் பொழுதுபோக்கினாராம். எப்படியோ அந்தத் தொழில் போராட்டத்திற்கு இடையே நகர்ந்துகொண்டிருந்தது; தந்தையின் இறுதிக்காலம் வரையில் ஒரு சிறு வருவாய் உதவிக்கொண்டிருந்தது. இது போதாத குறையால்தான் தாய் குடும்பத்தில் இருந்து வறுமைத்துன்பம் படமுடியாமல் லண்டன் மாநகரை அடைந்தார். குடும்பம் இவ்வாறு பிரிந்த பிறகும் தந்தை இயன்ற அளவு சிறிய தொகையைத் தம் குடும்பத்திற்கும் கொடுத்து உதவிவந்தார். மீண்டும் குடும்பத்தைச் சேர்த்து வாழ வேண்டும் என்பதற்காக ஒருவகை முயற்சியும் செய்யாமல் ஏதோ ஒருவகை ஆறுதல் கொண்டு காலம் கழித்தார். "இந்த நிலைமையில் இருந்துவந்த ஏற்பாடு அன்பற்றது என்றோ குறையுடையது என்றோ நாங்கள் யாரும் உணரவே இல்லை. பழக்க வழக்கங்களைப் பற்றியோ மற்ற உணர்ச்சிகளைப் பற்றியோ நாங்கள் கவலைப்பட்டதும் இல்லை" என்று ஷா குறித்துள்ளார். சமூகத்திலிருந்து ஒருவாறு பிரிந்துவாழ்ந்த குடும்பமாக இருந்ததே இதற்குக் காரணம்.

தந்தையின் குடிப்பழக்கம் நெடுங்காலம் கழித்து முடிவுக்கு வந்தது. ஒரு ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் அவர் விழுந்து பட்ட பெருந்துன்பமே அவரைச் சீர்திருத்தியது; இனிக் குடிப்பழக்கத்தை நிறுத்தாவிட்டால் அழிவு நேரும் என்று உணரச்செய்தது. அவரும் உணர்ந்தார்; ஆனால் உணர்ந்தும் பயனில்லை என்று சொல்லத்தக்க இறுதிக்காலத்தில் உணர்ந்தார். ஆகையால் அதனால் குடும்பத்திற்கு ஒருவகை நன்மையும் ஏற்படவில்லை.

## கற்றவை, பயின்றவை

தாயும் தமக்கையரும் லண்டனுக்குப் போய் வாழத் தொடங்கியபோது ஷாவுக்கு வயது பதினைந்து. வறுமையின் காரணத்தால் உயர்நிலைக் கல்விக்கு வழியற்ற சிறுவனாக வளர்ந்த போதிலும், நுட்பமாக அறிவு பெற்றிருந்தமையால் அப்போதே ஆங்கில நூல்கள் பலவற்றைப் படித்திருந்தார். பாடல் பல கற்றிருந்தார்; ஆயினும் கவிஞர்களில் ஷெல்லி ஒருவரே அவருடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டாராம்.

கல்வித் துறையில் ஷாவுக்கு வாய்ப்புக் குறைவாக இருந்தது போலவே, சமூக உறவிற்கு உரிய நாகரிகப் பழக்க வழக்கங்களில் பயில்வதற்கும் வழியில்லாமல் இருந்தது. அவர் வளர்ந்த குடும்பம் சமூகத் தொடர்பு குன்றிய குடும்பமாக நின்றதுதான் காரணம். பிற்காலத்தில் உலகத்தாரைப் போல் போலி நாகரிக மதிப்பைத் தேடி மற்றவர்களுக்கு இயைந்து நடக்கமுடியாமல் ஷா வாழ்ந்ததற்கும் இதுவே காரணமாக அமைந்தது. சமயத் துறையிலும் ஷா இளமையில் ஒன்றும் அறியாதவராக வளர்ந்தார். அவருடைய பத்தாவது வயதிற்கு முன்பே குடும்பத்தார் கோயிலுக்குப் போகும் பழக்கத்தை விட்டு விட்டார்கள். பொறுப்பற்றவர்கள் நடத்தும் குடும்பத்தில் வறுமை புகுந்து வாழ்க்கைப் போராட்டத்தை வளர்த்தால், அங்கு என்ன எதிர்பார்க்க முடியும்? கோயிலுக்குச் செல்லும் பழக்கம் இல்லாவிட்டாலும், சிறுவனாக இருக்கும்போதே ஷாவுக்கு வழிபாட்டுப் பழக்கம் மட்டும் இருந்தது. அந்த வயதிலேயே தானாக வழிபாட்டுரை இயற்றி வழிபடும் திறமை இருந்ததாம். பிற்காலத்தில் பெரும் புலவராக மொழியாற்றல் பெற்று விளங்குவதற்கு அது அறிகுறியாக இருந்தது. அந்தச் சிறுவயதில் இடி-

முழக்கங்களைக் கேட்டு நடுங்கும் போதெல்லாம் வழிபாட்டின் துணையால் ஒருவாறு உறுதிபெற்று வந்தாராம். ஞாயிற்றுக்கிழமைகளில் கோயிலுக்குச் செல்லும் பழக்கம் குடும்பத்தில் நின்ற பிறகும் வழிபடும் வழக்கத்தை விடாமல் வைத்திருந்தாராம். ஒரு நாள் மாலை நடந்து சென்று கொண்டிருக்கும் போது, திடீரென்று, "நாள்தோறும் ஏன் வழிபாடு நடத்தவேண்டும்? எனக்கு அதில் ஒன்றும் நம்பிக்கை காணேமே" என்று உள்ளத்தில் புரட்சி தோன்றியதாம். அதற்கு ஏற்ற காரணம் தெரியாமையால், அன்று இரவு வழிபாட்டை நிறுத்திவிட்டாராம். ஆனால் மனம் அமைதியுருமல் குழம்பினராம். மறுநாள் மனக்குழப்பம் குறைந்ததாம்; பிறகு படிப்படியாக இல்லாமல் போயிற்றும். இன்னும் சிறிது வளர்ந்த பிறகு பைபிலையும் படிக்காமல் பழித்தபோது தந்தை தலையிட்டுக் கடிந்தார்; அதன் பெருமையையும் படித்து உணர வேண்டிய கடமையையும் எடுத்துரைத்தார். ஆயினும் மகன் மனம் மாறவில்லை. தாயோ சமயத்துறையில் மக்களுக்கு ஒன்றும் வழிகாட்டவில்லை, இதைப் பற்றி அறிஞர் ஷா எழுதும் போது, "என் தாய் இவ்வாறு கவலையில்லாமல் வளர்த்த முறையினுல், என் தமக்கையர் இருவருக்கும் பெருந் தீமையே விளைந்தது. ஆனால் என்னைப் பொறுத்த வரையில் என் அறிவில் சமயத்துறை அழியவில்லை. உண்மையான நம்பிக்கைகள் குடிபுகுவதற்கு வழிவகுத்தாற்போல் இருந்தது; ஆகையால் அறிவுக்கு இயைபான உண்மைகளை உணரமுடிந்தது" என்று எழுதியுள்ளார்.

இவ்வாறு வளர்ந்து வந்த ஷாவின் வறுமை பொல்லாததாக இருந்தும் அவர் கடன் வாங்கிச் செலவு செய்ய அஞ்சினர். ஒரு நண்பனிடம் ஐந்து பவுன் கடன் வாங்கியபின் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் போய்விட்டால், அவனுடைய நட்பை ஐந்து பவுனுக்கு

விற்றுத் துறந்தது போல் ஆகுமே என்ற உணர்ச்சி அவருக்கு இளமையிலேயே இருந்தது. அவருடைய பண முடையைத் தாமே அறிந்து கொடுக்க முன்வந்த நண்பர்களின் உதவியையும் பெருமல் மறுத்துவந்தார்.

நண்பர்கள் சிலர் அவருக்குத் தொழில் தேடித் தர முன்வந்தபோதும் அவர் தயங்கித் தயங்கி நின்ருர். வியாபாரத் துறையில் ஒருவரிடம் தொழில் ஏற்பது அவருக்குப் பிடிக்காததாக இருந்தது. அத்தகைய தொழிலைத் தேடித் தரக்கூடும் என்று அஞ்சியே நண்பர்களின் உதவியைப் பெறவும் தயங்கி நின்ருர். சில இடங்களில் முயன்ருர்; ஆனுல் முயற்சியில் வெற்றி பெற வேண்டும் என்ற ஊக்கம் கொள்ளாமல் சோர்வோடுதான் முயன்ருர். அவர் எவ்வாருே உடன்பட்டு ஏற்ற முதல் தொழில் டப்ளின் நகரத்தில் ஒரு ஜமீன்தாரிடத்தில் கணக்கர் (குமாஸ்தா) வேலையாகும். மாதம் பதினெட்டு ஷில்லிங் வருவாயாக ஏற்பட்டது. அது முப்பது ஷில்லிங்காக உயர்ந்தபோது, மேல் நிலையில் இருந்த பொறுப்பான கணக்கர் இறந்துபோகவே, அந்தத் தொழிலுக்குத் திறமை மிக்க ஆள் தேவையாக இருந்தது. ஷாவின் திறமை உணர்ந்த முதலாளி அவரை அதற்கு ஏற்படுத்திக் கொண்டார். சிறு தவறும் நேராமல் கணக்கு முதலியவற்றை ஒழுங்காக வைத்துக்கொண்டும், பணம் முதலியவற்றில் பொறுப்பாக நடந்துகொண்டும், ஷா முதலாளியின் மனத்தைக் கவர்ந்தார். ஆண்டுக்கு நாற்பத்தெட்டுப் பவுன் சம்பளமாகும் நிலைமையும் வந்தது. இறுதியில் வியாபாரத்துறை தமக்குத் தகாது என்ற எண்ணத்திற்கு மாருக, அந்தத் துறையில் தாம் திறமை பெற்று விளங்க நேர்ந்ததை எண்ணி ஷாவே மருண்டாராம். ஆயினும் தொழிலில் விருப்பம் ஏற்படவில்லை. ஒருமாத அறிக்கை கொடுத்துவிட்டு 1876-ம் ஆண்டில் அந்தத் தொழிலைவிட்டு

விலகிஞர். அவரைவிட மனம் இல்லாமல் முதலாளிகள் எவ்வளவோ முயன்றும், சம்பளத்தை உயர்த்த முன்வந்தும், ஷா பிடிவாதமாக இருந்து தொழிலை உதறிவிட்டுச் சிலநாள் ஓய்வை டப்ளின் நகரத்தில் கழித்துவிட்டு லண்டனுக்குப் புறப்பட்டுத் தாய்க்குச் சுமையாகச் சென்று சேர்ந்தார்.

## லண்டனில் வாழ்வு

தாம் லண்டனுக்குப் போய்ச் சேர்வதற்குக் காரணமாக இருந்த மனநிலை இன்னது என்பதை ஷாவே விளக்கியுள்ளார். அப்போது கலைவகையான வாழ்க்கைமுன்னேற்றத்தை நாடிய அயர்லாந்துக்காரர் ஒவ்வொருவரும் அயர்லாந்தை விட்டு வெளியே செல்வதை முதல் கடமையாகக் கொண்டிருந்தார்கள். ஷா லண்டனுக்குப் போனதும் அத்தகைய முயற்சியே. ஆனல் லண்டனை மட்டும் தேர்ந்தெடுக்க வேண்டிய சிறப்பு என்ன? "விஞ்ஞானமோ, இசையோ என் கலையாக இருந்தால் பெர்லினுக்கோ லிப்சிக்குக்கோ சென்றிருப்பேன். ஓவியமாக இருந்தால் பாரிஸ் நகருக்குச் சென்றிருப்பேன். சமயக் கலையாக இருந்தால் ரோம் நகருக்குப் போயிருப்பேன். என் கலைக் கருவி ஆங்கில மொழியாக இருந்தது; அதனல் லண்டன் நகரம் தவிர வேறு போக்கிடம் எனக்கு இல்லை. 1914-ல் ஜெர்மானியர் என்னைத் தாய்நாடு அற்ற பேர்வழி என்று இகழ்ந்தார்கள். அதைப் பற்றி நான் எள்ளளவும் வருந்தவில்லை" என்று எழுதியுள்ளார். அயர்லாந்தை 1876-ல் விட்டுப் பிரிந்த அவர் 29 ஆண்டுகள் கழித்த பிறகுதான் 1905-ல் அங்குப் போனர். அதுவும் தம் மனைவியின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டிப் போக இசைந்தாராம். அயர்லாந்து மக்களும் அவருடைய திறமையை

நெடுங்காலம் உணரவில்லை. இயல்பாக அவர்களிடம் உள்ள பொறுமையும் நெடுங்காலம் அடிமை வாழ்வில் தேங்கியிருந்த உணர்ச்சியுமே அவ்வாறு தம் நாட்டு அறிஞரைப் போற்றுததற்குக் காரணம் என்று ஜே. எஸ். காலிஸ் என்ற அறிஞர் எழுதியுள்ளார். அவருடைய முதுமையில்தான் டப்ளின் நகர முனிசிபாலிடி அவரை மதித்துச் சிறப்புச் செய்து பாராட்ட முன்வந்தது. "என் சொந்த நகரத்தின் இந்தப் பாராட்டுக்கு நன்றி செலுத்துகிறேன். இது வரையில் வெளிநாட்டாரின் பாரட்டுதல்கள் நெருங்கிய போதெல்லாம் ஒளிந்து தப்பித்து வந்தேன். ஓயாத கருத்துப் போர்கள் இருந்து வந்தாலும், டப்ளின் நகரத்தை நான் அவமதித்தது இல்லை என்பதை அந்த நகரம்தான் சொல்ல உரிமை உண்டு. நேரில் வந்து சிறப்பை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் நான் இல்லை. என் தள்ளாத முதுமை அதற்கு இடந்தரவில்லை" என்று எழுதினர். டப்ளின் முனிசிபல் குழு ஒன்று லண்டனுக்கே வந்து அந்தச் சிறப்பை அவருக்கு வழங்கியது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் லண்டனில் உள்ள அயர்லாந்துக்காரர் 'ஐரிஷ் கிளப்' என்ற ஒரு கழகம் அமைத்து அதற்கு வாழ்த்துக் கூறுமாறு ஷாவுக்கு அழைப்பு அனுப்பியிருந்தார்கள். ஷா எழுதிய பதிலில், "ஐரிஷ்கிளப் என்ற ஒன்று எனக்கு மிக இழிவானதாகத் தோன்றுகின்றது. இங்கிலாந்தில் உள்ள நீங்கள் ஆங்கிலேயருடைய கழகங்களில் கலந்துகொள்ள வேண்டும். இங்கே வந்த பிறகும் இப்படித் தனிக்குழுவாக வாழ்வதானல், அயர்லாந்தை விட்டு வெளிவராமல் அங்கேயே இருந்திருக்கலாமே. ஆங்கிலேயருடைய கழகங்களில் உங்களுக்கு நல்வரவேற்பு இருக்கின்றது. ஆங்கிலேயர் ஒருகால் உங்களைவிட முட்டாள்களாக இருக்கலாம். ஆனல் நீங்களும் அவர்களும் ஒருவர்க்கு ஒருவர் அந்நியர்

ஆகையால் கூடிப் பழகிக் கற்றுக் கொள்ளக் கூடியவை பல உள்ளன" என்று எழுதினார்.

## உழைக்கும் ஆற்றல்

லண்டனுக்கு வந்து சேர்ந்த பின்பும் ஷா இரண்டு ஆண்டுகள் பயனுள்ள ஒரு தொழிலும் செய்யாமல் கழித்தார். அவருக்கு இருந்த சூழ்நிலையும் பண்பும் மட்டும் ஒருவருக்கு இருந்தால் வாழ்க்கையில் ஒருவகையாலும் முன்னுக்கு வந்திருக்க முடியாது. இந்தச் சூழ்நிலையும் பண்பும் இருந்தபோதிலும் அவரிடம் இருந்த அறிவுத் திறனும் உழைக்கும் ஆற்றலுமே அவர் முன்னேறியதற்குக் காரணங்கள். இடைவிடாமல் உழைக்கும் ஆற்றல் அவரிடம் இருந்தது. "என் தந்தை குடிப்பதில் எவ்வளவு வல்லவரோ அவ்வளவு உழைப்பதில் வல்லவன் நான்" என்று தம்மைப் பற்றித் தம் இயற்கையான போக்கில் குறிப்பிடுகின்றார்.

அறிவுத் துறையிலோ சுவையற்ற எதையும் அவரால் கற்றுக்கொள்ள முடியாதாம். கண்டதை எல்லாம் திணித்துவைக்கும் நினைவாற்றலும் அவருக்கு இல்லையாம். தேவையானதைக் கொள்ளுவதும் மற்றதைத் தள்ளுவதுமே அவருடைய மூளையின் இயல்பாம். "போட்டியிடும் வேட்கையும் என்னிடம் இல்லை. பரிசுகளும் சிறப்புகளும் பெறும் ஆவலும் இல்லை. அதனால் போட்டித் தேர்வுகளில் நான் அக்கரை கொள்ளவில்லை. ஒருகால் கலந்து நான் வெற்றி பெற்றாலும் தோற்றவர்களின் ஏமாற்றத்தைக் கண்டு வருந்துவேன். நான் தோற்றுவிட்டாலோ தன்மதிப்பு இழந்ததாக வருந்துவேன். என்னைப் பற்றி எனக்கு உள்ள மதிப்புப் பெரியது; தங்கப் பதக்கம் முதலியவற்றால் என் மதிப்புச் சிறிதாவது உயரும் என்று நான் நம்பவில்லை. அதனால் பள்ளிக்கூடம்

என் உள்ளத்தைக் கவரவில்லை. ஆகவே நான் அங்குக் கற்றது ஒன்றும் இல்லை. அதைக் குறித்து இப்போது நினைத்து மகிழ்கின்றேன். ஏன் என்றால், செயற்கையான உடல் உழைப்பு உடலைக் கெடுப்பது போல், செயற்கையான மூளை உழைப்பும் தீமைசெய்யும் என்று நான் உணர்கின்றேன். ஆகவே விருப்பமில்லாதவைகளைத் திணித்துப் புகட்டும் கல்விமுறை, மரத்தூளை வற்புறுத்தி உண்ணச் செய்வது போன்றதுதான். குழந்தையின் கையையும் காலையும் இரும்பால் பிணித்துப் பெற்றோர் விரும்பிய போது விரும்பியவாறு ஆட்டி அசைத்துப் பழக்கினால் அந்தக் குழந்தை நடை முதலியவைகளைக் கற்றுக்கொள்ள முடியுமா? டப்ளினில் உள்ள டிரினிடி கல்லூரியில் பயின்றவர்கள் பயனற்றவர்களாக இருப்பதை இளமையிலேயே கண்டு அதையும் வெறுத்துவிட்டேன்" என்று அவரே எழுதியுள்ளார்.

இவ்வாறு இயற்கையான கல்வியில் அவருக்கு இருந்த ஆர்வம் லண்டனுக்கு வந்த பின் உரிய வாய்ப்பைப் பெற்றது. லண்டன் பொருட்காட்சிநூல்நிலையத்திற்கு நாள்தோறும் போவதும் இடைவிடாமல் படிப்பதும் எழுதுவதும் அவருக்கு விருப்பமான கடமைகளாக அமைந்தன. கணக்கராக இருந்து பெற்ற பயிற்சியால் நாள்தோறும் ஏதேனும் படிப்பதும் எழுதுவதும் தவறாமல் செய்ய வேண்டும் என்ற கொள்கை இருந்துவந்தது. ஆறு பென்னிக்குக் காகிதம் வாங்கி வைத்துக்கொண்டு நாள்தோறும் தவறாமல் ஐந்து பக்கம் எழுதிவந்தார்.

"ஊக்கம் இருந்தாலும், சோர்வே வந்தாலும், மழைக்காலமானாலும் மற்றக் காலமானாலும் நாள் தவறாமல் ஐந்து பக்கம் எழுதிவந்தேன். பள்ளிப் பிள்ளைத் தன்மையும் கணக்கர் தன்மையும் என்னைவிட்டு நீங்காமையால் ஐந்தாவது பக்கத்து முடிவில் ஒரு வாக்கியம்

அரைகுறையாக நின்றாலும் அப்படியே விட்டுவிட்டு, மறு நாள் தொடர்ந்து எழுதிவந்தேன். ஒருநாள் தடைப்பட்டு எழுதத் தவறினாலோ, மறுநாள் அதையும் சேர்த்து இரண்டு பங்காக எழுதி முடித்துவந்தேன். இப்படித் திட்டம் இட்டு ஒழுங்காக எழுதிவந்த காரணத்தால் ஐந்து ஆண்டுகளில் ஐந்து நாவல்களை எழுதி முடித்தேன். இந்தத் தொழிலை நானே எனக்கு ஆசிரியராக இருந்து கற்பித்துவந்தபடியால், ஆராய்ச்சி வல்ல ஆசிரியரிடம் கற்க முனைந்து தன்னம்பிக்கையும் மன நிறைவும் இல்லாமல் வருந்தும் மாணவரைப் போல் வருந்திவந்தேன். இத்தகைய ஆசிரியராகிய எனக்கு எழுத்தாளராகிய நான் மாணவன். ஆசிரியரை மாணவன் ஏய்க்கவும் முடியவில்லை; மகிழ்விக்கவும் முடியவில்லை. இதற்கிடையில் வறுமையின் தொல்லை வேறு. இரண்டு நெருக்கடியான காலங்களை இன்னும் மறக்க முடியவில்லை. கிழிந்த பூட்சுகளை அணிந்திருந்தேன். சொக்காயின் கை ஓரம் கந்தலாகியிருந்தது; அதை வெளியே தெரியாதபடி மிகத் திறமையாகக் கத்தரித்து அணிந்திருந்தேன். தொப்பியோ பல ஆண்டுகளாக இருந்து பழம் பொருளாகத் தோன்றியதால் முன் பின்னாக மாற்றி அணிய வேண்டியதாக இருந்தது. ஆனாலும் வாழ்க்கைப் போராட்டத்தில் நான் ஈடுபடவில்லை. என் தாயை அதில் ஈடுபடச் செய்துவிட்டு நான் ஒதுங்கியிருந்தேன். என் தந்தைக்கு நான் கைகொடுத்து உதவவில்லை. அவரைப் பிடித்துத் தொங்கிய நிலையில்தான் நான் இருந்தேன். குடும்பத்தில் அப்போதிருந்த வறுமை பொல்லாதது. என் உதவியை மற்றவர்கள் எதிர்பார்க்க வேண்டிய நிலை அது. ஆனால் என் ஏழைத் தாய் இளமையில் விரும்பிக் கற்றுக் கொண்ட இசைக் கலையை விற்று எனக்குக் கொடுத்த பணத்தைச் செலவு செய்யும் நிலையில் நான் இருந்தேன். அதனால் என்னைச் சிலர் இதயப் பண்பாடு அற்றவன்

என்றும் பழித்தார்கள். ஆயினும் எப்படியோ நாள் தோறும் விடாமல் ஐந்து பக்கம் எழுதிவந்த பழக்கத்தால் அடிமையாகாமல் தப்பினேன். தாயின் உழைப்பால் கிடைத்த பணத்தால் வாழ்ந்து வளர்ந்து என்னை மனிதனுக்கிக் கொண்டேன்" என்று எழுதிய எழுத்துக்கள் அவருடைய வாழ்க்கை இருந்த நிலையையும் அறிவின் திறமையைப் பயன்படுத்தி உழைத்த ஆற்றலையும் விளக்குகின்றன.

## எழுத்தாளர்

லண்டனில் முதல்முதலில் அவர் தொழில் என்று ஏற்றுச் செய்தது இசைக்கலைஞர் ஒருவருக்கு உதவியாக இருந்ததே ஆகும். அந்தக் கலைஞர் இசையாராய்ச்சியாளராக ஒரு தொழிலை ஏற்றுக்கொண்டார். ஆனால் அவருக்காக ஷாவே எல்லாம் எழுதிக்கொடுத்து வந்தார். ஷா எழுதியதை அந்தக் கலைஞர் கூட்டியும் குறைத்தும் திரித்தும் கெடுத்தும் வெளியிட்டுவந்தார். அவற்றைக் காணக் காண ஷா நொந்து வருந்தினராம். தம் பெயர் வெளியே தெரியாதபடி இருந்து காத்துக்கொண்டாராம். பிறகு தம் அத்தையின் மகள், ஒரு டெலிபோன் கம்பெனியின் செயலாளருக்கு ஒரு கடிதம் கொடுத்து வேலை பெறுமாறு செய்தாள். 1879-ல் அங்கே தொழில் செய்து வந்தபோது அந்தக் கம்பெனி வேறொரு டெலி போன் கம்பெனியுடன் இணைத்துக்கொள்ளப்பட்டதாம். அப்போது சிலருக்கு வேலை இல்லாமல் போய்விட்டது. மறுபடியும் வேலை தரப்படும் என்று வாக்குறுதிகள் பிறந்தபோதிலும், ஷா அதற்காக முயற்சி ஒன்றும் செய்யாமல் நின்றுவிட்டார். 1881-ல் தேர்தல் நடந்தபோது ஓட்டு எண்ணும் தொழிலில் இரண்டொரு நாள் கழித்தார். பிறகு 1885-ஆம் ஆண்டு வரையில் வேலையற்றவராக

விளங்கித் தாயின் உதவியால் காலம் கழித்துவந்தார். 1885-ம் ஆண்டில்தான் முதல் முதலாக எழுத்தாளராக வருவாய் பெறத் தொடங்கினர். அந்த ஆண்டில் இவருக்கு 112 பவுன் கிடைத்ததாம். அதன்பிறகு உலகப்போர் நடந்த 1914-18 வரையில் பணத்தொல்லையே இல்லாமல் வாழ்ந்துவரலானர். போர் முடிந்தபின் வருவாய் பெருகியது. வறுமையின் கொடுமை அவரைவிட்டு அடியோடு அகன்றது, செல்வமும் சேர்ந்தது.

ஐந்து ஆண்டுகள் உழைத்து ஐந்து நாவல் எழுதியதால், எழுதும் பயிற்சி பெற்றரே அல்லாமல் எழுத்தாளராக வெற்றி பெறவில்லை. அந்த ஐந்து நாவல்களையும் லண்டனில் உள்ள எல்லாப் புத்தகக் கம்பெனிகளுக்கும், அமெரிக்காவிலுள்ள சில கம்பெனிகளுக்கும் அனுப்பிப் பார்த்துவிட்டார். ஒருவரும் ஏற்கவில்லை. ஐம்பது அல்லது அறுபது முறை மறுப்போடு திருப்பியனுப்பப் பட்டன. ஆனல் ஷா சோர்வுறவில்லை. "புகழுக்கும் பழிக்கும் கவலைப்படாத ஒருவகை உணர்ச்சியற்ற தன்மையை அதனல் பெற்றேன். அந்தத் தன்மை அந்நாள் முதல் எனக்குப் பயனுள்ளதாக இருந்துவருகின்றது. அதனல் நூல் வெளியீட்டிலும் நாடக நடைமுறையிலும் அக்கறை குறைந்தவனக இருந்துவரும் பண்பும் வளர்ந்து எனக்குச் சில வேளைகளில் இடையூருகவும் இருந்தது. தொடர்ந்து எழுத்துக் கடமைகளைச் செய்வதற்கு இயலாது என்றும் நான் உணரும்படி செய்தது. அதனல் பிற்காலத்தில் கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளாமல் நெகிழவிடுவதும் ஒத்திவைப்பதுமாகத் தவறும் செய்திருக்கின்றேன்" என்று அவர் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். "மிகுதியாகவும் நன்ருகவும் எழுத எழுத மறுப்பும் திருப்புமே மிகுந்துவந்தன. இறுதியில் காரணம் கண்டு கொண்டேன். இலக்கியக் குறை

ஒன்றும் என் நூல்களில் புத்தகக் கம்பெனியார் காண வில்லை. ஆனால் மதிப்புப் பெற்றுவந்த கொள்கைகளுக்கும் சமூக வாழ்வுக்கும் முரண்பாடானவற்றை நான் எழுதி வந்ததே காரணம் என்று உணர்ந்துகொண்டேன். ஆயினும் உடனே என் எழுத்தை, நிறுத்தவில்லை. ஐந்தாம் நாவல் எழுதிக்கொண்டிருந்தபோது பத்திரிகை யுலகத்தில் எழுதும் வாய்ப்புக் கிடைத்தபோதுதான் என் முயற்சியை நிறுத்தினேன்" என்றும் குறிப்பிட்டுள்ளார். மீண்டும் கற்பனையாக நூல் எழுதத் தொடங்கியபோது, அவர் நாவல் எழுதுவதைவிட்டு, நாடகங்கள் எழுதத் தொடங்கினார்; இணையற்ற நாடக ஆசிரியர் ஆனார்.

ஒரு பத்திரிகையில் மதிப்புரை எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. பிறகு மற்றொன்றில் ஓவியங்களை மதிப்பிட்டு எழுதும் பொறுப்பும், இன்னொன்றில் இசையும் கலையும் பற்றி எழுதும் கடமையும் வாய்த்தன. புனைபெயர் கொண்டு 'ஸ்டார்' என்ற இதழுக்கு இசையைப் பற்றிப் பல கட்டுரைகள் எழுதினார்; மெல்ல மெல்ல இவ்வாறு தான் அவர் எழுத்தாளர் உலகத்தில் தக்க இடம்பெற்றார்.

நாடகம் எழுதுவதில் ஷா முதல்முதலாக ஈடுபட்டது 1890-ம் ஆண்டிலாகும். (மனைவியிழந்தவரின் மனைகள்)' (Widower's Houses) என்பதே அவருடைய முதல் நாடகம். அது 1892-ல் நடிக்கப்பட்டது; ஆனால் வெற்றி யளிக்கவில்லை. (வாரன் அம்மையாரின் தொழில்') (Mrs. Warren's Profession) என்னும் அடுத்த நாடகமும் அந்த ஆண்டில் வெளிவந்தது; ஆனால் அதை நடிக்கக் கூடாது என்ற தடையும் இங்கிலாந்தில் பிறந்தது; அமெரிக்காவிலோ நடித்தவர்கள்மேல் வழக்குத் தொடரப்பட்டது. 1894-ம் ஆண்டில் எழுதி வெளிவந்த (கான்டிடா)(Candida) என்பதே முதல்முதலாக நாடகமேடையில் அவருக்கு வெற்றிபெற்றுத் தந்த நாடகமாகும். அவ்

வாறு வெற்றி பெற்றதும் ஜெர்மனி நாட்டிலாகும். அந்த நாட்டிற்கு அடுத்தபடி அமெரிக்கா இந்த நாடகக் கலைஞரைப் போற்றத் தொடங்கியது. ஆனால் 1903-ம் ஆண்டில் '(மனிதனும் உயர்நிலை மனிதனும்)' (Man and Superman) என்னும் நாடகம் மேடைக்கு வந்த பிறகே இங்கிலாந்திலும் அவர் வெற்றியைக் காணமுடிந்தது.

## கலைவாழ்வு

ஓய்வுநேரங்களில் இப்சென் என்ற பேராசிரியருடைய நூல்களை விரும்பிக் கற்றுத் தேர்ந்து அவரைப் போற்றும் கலைஞராகப் புகழ்பெற்றார். அதன் பிறகே அவர் இலக்கிய உலகில் ஓரளவு இடம்பெற்று முன்னேறினார். பல சொற்போர் மன்றங்களில் கலந்துகொண்டார். பேசுவோரின் கருத்துக்களைக் கற்றார்; தாமும் பேசிப் பேச்சுக் கலையில் வல்லவரானார். லண்டன் பொருட்காட்சிநூல்நிலையத்தில் அவர் விடாமல் கற்றுத் தேர்ந்த நூல்களுள் கார்ல் மார்க்ஸ் எழுதிய 'முதல்' (காபிடல்) என்பதும் ஒன்று. அதைக் கற்ற பிறகு புதிதாக அமைக்கப்பட்ட பேபியன் (Fabion) கழகத்தில் சேர்ந்து தொண்டாற்றினார். அங்குத் தலைவராய் விளங்கிப் பொதுவுடைமைக் கொள்கைகளைப் பரப்புவதற்காகப் பேசியும் எழுதியும் உழைத்து வந்தார். "அறிவுள்ள நங்கைக்குப் பொதுவுடைமையும் முதலாளித்துவமும் பற்றி அறிவிக்கும் வழிகாட்டி." (The Intelligent Woman's Guide to Socialism and Capitalism) என்ற நூலில் அவருடைய பொதுவுடைமைக் கொள்கைகளைத் தெளிவாக்கியுள்ளார். அவர் எந்த ஆசிரியருடனும் முழுதும் உடன்படாததுபோலவே கார்ல் மார்க்ஸுடனும் முழுதும் உடன்படுவதில்லை. பல கருத்து வேறுபாடுகளைச் சில நூல்களின் முகவுரைகளிலும் விளக்கி எழுதிக் குறைகூறியிருக்கின்றார்.

இவ்வாறு அறிவுலகத்தில் இறுமாந்து திரியும் பேறு பெற்ற காரணத்தால்தான் ஷா போதிய வருவாய் பெருமல் வறுமைக்கு இடையே வாழ்ந்தும் கவலைப்படவில்லை. "நான் சமூகத்திற்குப் புறம்பாக, அரசியலுக்குப் புறம்பாக, விளையாட்டு அமைப்புகளுக்குப் புறம்பாக, கோவிலுக்கும் புறம்பாக வெளியே வாழ்ந்தேன். பொது வாழ்க்கைக்கு முற்றிலும் வெளியே நின்றுவிட்டேன் என்று கூறலாம். ஆனல் இசை, ஓவியம், இலக்கியம், விஞ்ஞானம் என்னும் துறைகளிலோ நேர்மாருக இருந்தேன். நான் ஒருவன்தான் இவற்றிற்கு இயைந்து இவற்றினுள் வாழ்ந்தேன்" என்றும், "வறுமையிலே ஒழுங்கின்றி வளர்ந்த காரணத்தால், வறுமை ஒரு தொல்லை என்றும் துன்பம் என்றும் உணர்ந்தபோதிலும், பாவம் என்றும் இழிவு என்றும் நான் கருதியது இல்லை. என் திறமை, கலை அறிவு, இடைவிடா உழைப்பு முதலானவற்றை நினைந்து தன்மதிப்போடு மகிழ்ந்துவந்தேன். கோடீசுவரரான பெருஞ்செல்வர்கள் கொட்டாவிவிட்டு ஏங்கியிருக்கும் கலைக்கூடங்களில் நான் இறுமாந்து நடந்தேன்; இன்பம் பல உற்றேன். எனக்கு இருந்த கலை அறிவு அத்தகையது. செல்வமங்கை ஒருத்தி தன் வைர அட்டிகையை இழந்தால் வருந்தி உருகுவதைவிட மிகுதியாக, உருக்கமான இசையைக் கேட்டதும் நெக்குருகும் நுண்கலை யுணர்வு எனக்கு இருந்தது. ஆகையால் ஒருகால் அந்தச் செல்வமங்கையை நான் காதலிப்பதாக இருந்தாலும், நல்ல ஆடை ஒன்றும் என்னிடம் இல்லையே என்று எள்ளளவும் கவலைப்படாத நிலையில் இருந்தேன்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வறுமையில் வாடும் இளைஞர் யாராவது இத்தகைய தம்முடைய வாழ்க்கையை எடுத்துக்காட்டாகக் கொண்டால் தவற நேருமே என்று அவர் அஞ்சி அறிவுரையும்

கூறியுள்ளார் : "நான் சமூக ஏணியின் அடியில் கீழ்ப்படியில் இருந்தேன். ஆனால் அந்த ஏணியின் மேல் ஏறிச் செல்லவில்லை. அதுவே என்னை இழுத்து மேல்நிலையில் வைத்துள்ளது. ஆகையால் ஏழை இளைஞர்கள் என் வாழ்க்கையை எடுத்துக்காட்டாகக் கருதி ஏமாற்றத்துக்கு ஆளாகக் கூடாது என்று எச்சரிக்கை செய்கின்றேன். அவர்களுடைய தாழ்ந்த நிலைமையை முன்னேற்றத்தின் முதல்படி என்று தவறாக எண்ணிக் கெடவேண்டாம்" என்பதே அவருடைய அறிவுரை.

## பொதுநலத் தொண்டு

லண்டனுக்கு வந்த பிறகு ஷா வறுமையால் திண்டாடிப் போராடிய காலம் ஒன்பது ஆண்டுகள். இரவும் பகலும் பல துறையிலும் உழைத்து உழைத்துப் பாடுபட்ட காலம் இருபது ஆண்டுகள். அந்தக் காலத்தில் அவர் ஊக்கம் மிகுந்தவராய் உழைத்தார். பல நூல்களையும் ஓயாமல் கற்றுக் கற்று அறிவை வளர்த்தார். பலவற்றைப் பற்றி இடைவிடாமல் குறிப்புக்கள் சேர்த்துக் கொண்டார். பன்னிரண்டு ஆண்டுகளாகப் பல கூட்டங்களில் பேசினார். ஆனால் பேசிய பேச்சுக்களால் அலுப்பே கண்டார். ஏன் ? பொதுமக்கள் கூடினார்கள் ; பேச்சுக்களைக் கேட்டார்கள் ; கைதட்டிப் புகழ்ந்தார்கள் ; அமைதியாக வீடுகளுக்குத் திரும்பினார்கள் ; இவ்வளவே பேச்சால் விளைந்தவை. ஷா எதிர்பார்த்தவாறு எவரும் முன்னேற்றத்திற்கு உரிய முயற்சிகளைச் செய்யவில்லை. பாவம் ! அவர்கள் என்ன செய்வார்கள் ? அவர்களைக் குறைகூறிப் பயன் என்ன ? வயிற்றுப் போராட்டத்திற்கு ஆளான மக்களுக்கு எண்ணிப்பார்க்க நேரம் ஏது ? மற்றவர்களுக்கோ முன்னேற்றத்தைப் பற்றிக் கவலை இல்லை. ஆனால் ஷா மட்டும் தம் நம்பிக்கையில்,

தளர்ச்சி யுற்ருர். குடியாட்சி முறையில் ஒரு குறை கண்டார். மக்களுக்காக மக்களால் நடைபெறும் மக்களாட்சியே குடியாட்சி என்பதை அவர் இயலாத ஒன்று எனக் கண்டார். அது மக்களாட்சியாக இருக்கும்; மக்களுக்காக நடைபெறும் ஆட்சியாகவும் இருக்கும்; ஆனல் மக்களால் (பொதுமக்களால்) நடைபெறும் ஆட்சியாக இருக்கமுடியாது என்றும், பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பொறுப்பு ஏற்ற அறிஞர் சிலரால்தான் நடைபெற முடியும் என்றும், அவர்கள் பொதுமக்களைக் கட்டாயப்படுத்தி முன்னேற்றினல்தான் வழி உண்டு என்றும் உணர்ந்தார். அவ்வாறு அவர்கள் ஆளும்போது, உழைத்தால்தான் உணவு உண்டு என்னும் கொள்கையோடு நிற்காமல், உழைத்தால்தான் உயிர்வாழ்க்கை உண்டு என்று வற்புறுத்தும் அளவுக்குச் சென்று எல்லோரையும் தொழில் செய்யுமாறு கட்டாயப்படுத்தி ஆள வேண்டும் என்றும் தெளிந்து விளக்கியுள்ளார்.

## செருக்கு, கிறுக்கு

அறிஞர் ஷாவினிடம் எல்லோரும் காணும் பெரிய குறை அவருடைய செருக்கும் கிறுக்கும் ஆகும். ஆனல் அவர் அவ்வாறு பேசும்போதும் எழுதும்போதும் அவரை ஒருவரும் வெறுப்பது இல்லை; அவரோடு சேர்ந்து சிரிக்கின்றவர்கள் இருக்கின்ருர்களே அல்லாமல் அவரை எள்ளி நகைக்கின்றவர்கள் இல்லை.

அவருடைய போக்கையும் கொள்கைகளையும் ஆராய்ந்தால் அவர் செருக்காகப் பேசும்போதும் எழுதும்போதும் கள்ளம் அற்ற குழந்தைத்தன்மையும் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, லண்டனில் ஐன்ஸ்டின் என்னும் அறிஞரைப் பாராட்டி விருந்து நடந்த கூட்டத்தில் ஷா பேச நேர்ந்தபோது, "உலகத்திலேயே இன்று பெரிய மனிதர்

இருவர் இருக்கின்றார்கள். ஒருவர் நான்; மற்றொருவர் ஐன்ஸ்டின்" என்று கூறினார். 'சோஷலிசம் கம்யூனிசம் என்னும் இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை ஒருமுறை விளக்க நேர்ந்தபோது, இந்தப் பொருள் எளியதே ஆனாலும் அரசியல் அறியாமையும் பொருளாதார அறியாமையும் மிகுந்துள்ள காரணத்தால் இந்தப் பேச்சு ஒருவருக்கும் விளங்குவதில்லை என்றும், உலகத்திலேயே இதை உணர்ந்தவர்கள் இருவரே என்றும் கூறினார். "அந்த இருவர் யார் என்றால் ஸ்டாலின் ஒருவர், நான் மற்றொருவன்" என்று குறிப்பிட்டார்.

இளம்பிள்ளைகளை அடித்தால்தான் படிப்பு வரும் என்று சிலர் கருதும் கொள்கைகளைக் கடிந்து எழுதும்போது இங்கிலாந்தில் புகழ்பெற்ற அறிஞராக விளங்கிய டாக்டர் ஜான்ஸனைக் குறைகூறுகின்றார். சிறுவர்களை நன்றாக அடித்தால்தான் சொற்களையும் தொடர்களையும் மனப்பாடம் செய்வார்கள் என்று ஜான்ஸன் கூறியுள்ளார். அதை ஷா மறுக்கின்றார். "ஜான்ஸனின் ஆசிரியர் அவரைக் கொடுமையாக நடத்தியிருப்பார். அதனால்தான் அவருடைய பெரிய மூளை ஒருவாறு திரிந்தது. நான் அவரைப் போல் ஆசிரியரிடம் அடிபடவில்லை. என் ஆசிரியர்கள் வரவேண்டிய சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு கவலை இல்லாமல் இருந்தார்கள். அதனால் நான் பள்ளிக்கூடத்தில் ஒன்றும் கற்கவில்லை. அந்தக் கல்வியைப் பெறாமல் தப்பியதால் ஜான்ஸனைப் போல் நான் மதுக்கடைகளில் இலக்கியம் கற்ற அறிவிலிகளோடு வீண்பேச்சுப் பேசிக் காலத்தை வீணாக்காமல் வாழ்ந்தேன். அந்தக் கல்வியால்தான், தம் திறமையைக் காட்டி இங்கிலாந்தை ஆட்டி வைத்திருக்கவேண்டிய ஜான்ஸன் காலத்தை வீண்பேச்சில் கழித்தார்" என்று எழுதியுள்ளார்.

தமக்குக் கிரேக்க மொழியிலும் லத்தீன் மொழியிலும் எவ்வளவு அறிவு உண்டு என்பதைப் பற்றி எழுதுமிடத்தில், "அந்த வகையில் நான் ஒரு ஷேக்ஸ்பியர்" என்று எழுதி, தமக்குத் தெரிந்தது மிகச் சிறிது என்னும் கருத்தைப் புலப்படுத்துகின்றார். பல இடங்களில் தாம் ஷேக்ஸ்பியரைவிடச் சிறந்தவர் என்று குறிப்பிடுகின்றார். "ஷேக்ஸ்பியர் காலத்தில் பிறந்திருந்து நானும் செய்யுள் வடிவில் நாடகங்கள் எழுதியிருப்பேனுல், நான் அவரை எளிதில் வென்று ஏழையாக்கி விட்டிருப்பேன்" என்று ஓரிடத்தில் எழுதியுள்ளார். இவ்வாறு ஷேக்ஸ்பியரைக் குறை கூறுவது தகுமா என்று கேட்டபோது, "இந்த உண்மையை ஆராயும் தகுதி யாருக்கு உண்டோ அவரிடம் சென்றுதான் இதைக் கேட்கவேண்டும். அதாவது இங்கிலாந்தில் மிகச் சிறந்த அறிவாளியிடம் செல்லவேண்டும். நான்தான் அந்த அறிவாளி" என்று விடை கூறினுர்.

அவர் எழுதியுள்ள நாடகம் ஒன்றில் ஒருவன் தன்னைப் பற்றி ஓர் இடத்தில் சொல்லிக்கொள்ளும்போது, "நான் பெர்னர்ட் ஷாவின் மாணவன்" என்கின்ருன். இவ்வாறு ஷா தம் நாடகத்தில் தம்மைப் பற்றிப் புகழும்படியாக எழுதிக்கொள்ளலாமா என்ருல், அதற்கு அவரே காரணம் சொல்கின்ருர். "நான் வேண்டும் என்றே அவ்வாறு எழுதினேன். ஒரு கிரிமினல் நீதி மன்றத்தில் (கோர்ட்டில்) சிறைப்பட்ட இளைஞன் ஒருவனுடைய வழக்கு நடந்தபோது, அவன் தன்னைப் பற்றி இவ்வாறு சொல்லிக்கொண்டு ஆறு மாதம் தண்டிக்கப்பட்டான்" என்று காரணம் காட்டுகின்ருர். தம் பெயுரைச் சொல்வதும் குற்றமாகக் கருதப்படுகின்றது என்பதை விளக்குவதற்காக நாடகத்தில் அவ்வாறு எழுதியுள்ளாராம்.

தம் நாடகங்களை எல்லாம் ஒருங்கு தொகுத்து அச்சிட்ட தொகுதிக்கு முகவுரை எழுதும்போது, "இவை என் வாழ்நாள் உழைப்பு. ஆகையால் இவற்றை ஒரு முறை படித்து உணர முடியும் என்று எண்ணுதீர்கள். என் நூல்கள் எல்லாவற்றையும் ஆண்டுக்கு இருமுறை யாக ஏறக்குறையப் பத்து ஆண்டுகள் படித்துப் பயில வேண்டும். அந்த நோக்கத்தால்தான் உங்களுக்காக இந்தப் பதிப்பு இவ்வளவு உறுதியாகக் கட்டப்பெற்று (பைண்டு செய்யப்பெற்று) வெளிவருகிறது என்று குறித் திருக்கின்ருர்.

ஹெர்ட்போர்ட் ஷயர் என்னும் சிற்றூரில் ஷா தங்கி யிருந்தபோது, அந்த ஊர்ச் செல்வ மங்கை ஒருத்தி அணுகி, "நீங்கள் இந்த ஊர்ப் பள்ளிக்கூடத்திற்காக என்ன செய்யப்போகின்றீர்கள்?" என்ருள். அதற்கு என்ன மறுமொழி கூறுவது என்று சொல்லத் தெரியாமல் ஷா தயங்கிஞராம். "மற்றப் பள்ளிக்கூடங்களை எல்லாம் வெடி வைத்து அழிக்க விரும்புவதுபோல் அந்தப் பள்ளிக் கூடத்தையும் செய்யவேண்டும் என்று நான் அப்போது சொல்லவில்லை. அவ்வாறு வெடி வைப்பதால் அதன் அருகே தங்கியிருந்த எனக்கும் இடையூறு வரும் என்பதை எண்ணியே அந்த வழி சொல்லவில்லை. அதனுல் அந்த அம்மாவையே வழி கேட்டேன். ஒரு பரிசு ஏற்படுத்துமாறு அந்த அம்மா சொன்னுள். நன்னடத்தைக்காகப் பரிசு ஏற் பட்டிருக்கிறதா என்று அவளைக் கேட்டேன். எதிர்பார்த்த படி நன்னடத்தை உடைய பையனுக்கு ஒரு பரிசும் பெண்ணுக்கு ஒரு பரிசுமாக இரண்டு பரிசுகள் இருப்பது அறிந்தேன். உடனே எண்ணிப்பார்த்து, மிகக் கெட்ட நடக்கை உடைய பையனுக்கு ஒரு பரிசும் பெண்ணுக்கு ஒரு பரிசும் நான் ஏற்படுத்துவதாகச் சொன்னேன். அவர் களுடைய பிற்கால வாழ்வையும் போக்கையும் பற்றிக்

குறிப்பெடுத்து வைக்கவேண்டும் என்று என் விருப்பத்தை வற்புறுத்தினேன். நல்ல நடக்கையால் பரிசு பெறும் பையனைப் பற்றியும் பெண்ணைப் பற்றியும் இவ்வாறே குறிப்பெடுத்து ஒப்பிட்டால், பள்ளிக்கூடத்தார் நன்னடக்கை என்றும் தீநடக்கை என்றும் ஆராயும் ஆராய்ச்சி எவ்வளவு உண்மை என்று காணவே அவ்வாறு சொன்னேன். ஆனல் என் கொடை மறுக்கப்பட்டது. பரிசுகளால் பிள்ளைகளின் தொல்லையைக் குறைக்க வேண்டும் என்பதே பள்ளிக்கூடத்தாரின் நோக்கமாக இருப்பதால், என் பரிசு தொல்லையைப் பெருக்கும் என்று அஞ்சியே மறுக்கப்பட்டது'' என்று ஒரு நிகழ்ச்சியை அவரே எழுதிவைத்துள்ளார்.

இவை போன்றவைகளை ஆராயும்போது, ஷாவினிடம் ஏதோ கோணல் இருப்பதாகத் தோன்றும். இன்னும் சில இடங்களைப் படித்துணர்ந்து, ஷாவினிடம் மனிதத் தன்மையே காணுமே என்று எண்ணுகின்றவர்களும் உண்டு.

## உண்மை, நேர்மை

ஷாவினிடம் கருத்துவேற்றுமைகள் பல காணலாம். அவர் சொல்வன எல்லாவற்றையும் எவரும் அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது. அவரிடமும் குறைகள் காண முடியும். காதலைப் பற்றியும் ஒழுக்கத்தைப் பற்றியும் அவர் கூறும் கருத்துக்களில் பொருந்தாதன சில உண்டு. ஆயினும் ஷாவினிடம் கோணல் ஒன்றும் இல்லை. அவர் எதை உணர்கின்றரோ அதையே சொல்கின்றர். மனச் சான்று பண்பட்டவர் ஆகையால், உள் ஒன்று புறம் ஒன்றாக நடிக்க அவரால் இயலாது. அவர் உண்மையாகவே தம் நூல்கள் அரியவை என்றும் சிறந்தவை என்றும் உணர்ந்துதான் எழுதுகின்றர். ஆகையால் தம் நூல்களைத் தாமே புகழ்ந்து கூறுகின்றர்.

தனியாட்கள் சிலரிடம் புறக்கணிப்பாக நடந்து கொண்டாலும், பிச்சைக்காரர் முதலானவரை அணுக வொட்டாமல் செய்தாலும், அவர், உயர்ந்த நோக்கங்கள் கொண்டவராய் உலகத்தை வாழ்விக்கத் தொண்டாற்றும் சான்றோர்களில் ஒருவரே. மக்கள் அறியாமையைப் போக்காமல் வீணாக மயங்கிக் கெடுகின்றார்கள் என்றும், போலியான பழக்கவழக்கங்களை மதித்துக்கொண்டு அடிப் படைகளைக் கைவிடுகின்றார்கள் என்றும் உணர்வதே அவருடைய புறக்கணிப்புக்குக் காரணம். பிச்சைக்கார ருக்கு உதவுவதால் அவர்கள் மானம் குறைந்து அமைதி அடைகின்றார்கள் என்பதும், சமுதாய ஊழல் அப்படியே தேங்குகின்றது என்பதும், வறியவர்களுக்கு நெருக்கடி மிகுதியானால் ஊழலைப் போக்க முயல்வார்கள் என்பதும், வறுமையே பாவங்கள் எல்லாவற்றிலும் பொல்லாதது என்று மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்பதும் அவர் கொள்கைகள்.

விலங்குகளுக்குத் துன்பம் செய்யலாகாது என்னும் கொள்கையைப் பரப்பும் ஒரு கழகக் கூட்டத்தில் ஷா வைப் பேசுமாறு அழைத்தார்கள். மேடையில் அமர்ந்த ஷா தம்மைச் சுற்றிலும் உள்ள செல்வர்களையும் செல் வாக்கு உள்ளவர்களையும் பார்த்தார். பேச எழுந்ததும், "பல விலங்குகளை வேட்டையாடிக் கொல்வதால் கிடைக் கும் தோலையும் மயிரையும் கொண்டு தம்மை அலங்காரப் படுத்திக்கொண்டு அமர்ந்துள்ளவர்களுக்கு இடையே நின்று பேச நேர்ந்ததைக் குறித்து வருந்துகின்றேன்" என்று அவர்களுடைய தவறு விளங்குமாறு தயங்காமல் இடித்துரைத்தார்.

கலைஞர்களை அவர் எவ்வளவு குறைகூறினாலும் கலையை அவர் சிறந்த கருவியாக மதித்துப் புகழ்கின்றார். ஷேக்ஸ்பியரைக் குறைகூறிய போதிலும், குணம் கண்ட

போது புகழ்கின்றார்; அவருடைய பெருமையை நிலை நாட்டும் வகையில் அவர்நினைவுக்காக அவர்பெயரால் நாடக அரங்கு ஒன்று ஏற்படுத்த ஷா பெருமுயற்சி செய்தார்; அதற்காவே ஒரு நாடகமும் (The Dark Lady of the Sonnets) எழுதினார். வீல்லியம் எச். டேவிஸ் என்னும் கவிஞரைப் பற்றி எழுதி அவரை உலகம் அறியுமாறு செய்தவர் ஷாவே. அறிஞர் வெல் ஸைப் பற்றி அவர் பல இடங்களில் புகழ்ந்து எழுதியுள் ளார். இவ்வாறே அறிஞர்களிடம் நல்லன கண்டபோது போற்றத் தயங்காமல் சிறப்பித்து எழுதியுள்ளார்.

"என்னுடைய கலையில் அழகுணர்வு காணப்படாமல் என் ஒழுக்க உணர்வின் கோணலும் அறிவின் கோண லுமே காணப்பட்டால், அது என் குற்றம் அல்ல. என் வாழ்க்கை பெரும்பாலும் பெரிய நகரங்களிலேயே கழிந் தது. என் அழகுணர்வுக்கு அங்கே இடம் இல்லை. ஆனால் அறிவுக்கோ கொழுத்த உணவு கிடைத்தது. ஏழைமக்கள் வாழும் குப்பங்களைப் பற்றி எண்ணி எண்ணியே அறிவும் அலுத்தது. இறுதியில், கலைஞன் என்னும் முறையில், அவற்றைப் பற்றியே சுவைபட எழுதும் கொடிய பழக்க மும் வந்து சேர்ந்தது. இதற்கு நான் என்ன செய்வேன்?" என்று ஓரிடத்தில் குறைகூறுவோர்க்கு மறுமொழி போல் எழுதியுள்ளார்.

"நானும் தவறு செய்யக்கூடியவனே. இன்னும் சொல்லப்போனால், பெரிய எழுத்தாளர்கள் தவறு செய் வார்களானால் அந்தத் தவறும் பெரிய தவறாக இருக்கும். (இந்தியாவைக் கண்டுபிடிக்க முயன்று அமெரிக்காவைக் கண்டு இந்தியா என்று மயங்கிய) கொலம்பஸ் செய்த பெரிய தவறுபோல்தான் இருக்கும்" என்கின்றார். "என்னை ஒரு தனிச் சிறப்புடைய மனிதன் என்று கூற லாம். நாடகங்களும் நூல்களும் எழுதுவதைப் பொறுத்த

வரையில் அது உண்மைதான். ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் மற்றவர்கள் செய்யமுடியாததைச் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றிருக்கின்றார்கள். ஆகையால் இதில் ஒன்றும் சிறப்பு இல்லை. வறுமை, செல்வம், அடிமைத்தன்மை, ஆளும்வகை இவற்றில் எல்லாம் எனக்கு இருந்த அனுபவத்தைக் கருதினால் நான் தனி வகையானவன் என்று கருதலாம். அல்லது, (மிகச் சுவையானது என்று சொல்லி ஏமாற்றி ஏதோ உதவாத மருந்தை என் வாயில் ஊற்றிச் சிறு வயதில் பழக்கினார்களே அந்தக் காரணத்தாலோ) எந்தக் காரணத்தாலோ பிறரால் சலித்தும் நொந்தும் மெலிந்தும் வருந்தியும் களைத்தும் துன்புற்றபோதெல்லாம் மிகச் சிறப்பாக இன்புறுவதாக எண்ணிக்கொண்டு உறுதியாக வாழ்ந்துவந்திருக்கின்றேன்: இந்த வகையிலும் நான் தனிவகையானவன் என்று கருதலாம். 'இவை தவிர எனக்குத் தனிச்சிறப்பு ஒன்று இல்லை" என்று அவர் எழுதுவதைக் கண்டால், இந்த ஷா வேறு ஒருவரோ என்று தோன்றும்.

தம் இளமையில் எழுதிய ஒரு நாவலைப் பற்றிக் குறிப்பிடும்போது, அதைத் தாம் எழுதியதாகக் கூறுமல், அந்த ஷா 1880-ல் இருந்தவர் என்றும், அவர் வேறு என்றும். இப்போது உள்ள தாம் வேறு என்றும் எழுதத் தொடங்கி, இறுதியில் " தன்மை படர்க்கை இலக்கணத் தொல்லைகள் புகுவதால், அந்த ஷாவையும் 'நான்' என்றே குறிப்பிட்டு எழுதுகின்றேன்; படிக்கின்றவர் வேறுபாடு உணர்ந்து கொள்ளவேண்டும்" என்று ஒரு முடிவுக்கு வருகின்றார். எட்டு ஆண்டுகள் கழிந்தால் உடலில் உள்ள எல்லாம் முற்றிலும் மாறிவிட்டு உடலே புதிதாக அமைகின்றது என்றும், எட்டு ஆண்டுகளுக்குமுன் இருந்த அணுக்கள் பிறகு உடலில் இருப்பதில்லை என்றும் உடல்நூலார் எழுதுவதை எடுத்துக்காட்டி, " இந்த நாவல் எழுதிய ஷா

1888-ல் இறந்துவிட்டார். அதற்குப் பிறகு பல ஆசிரியர்கள் அந்த ஷாவைத் தொடர்ந்து தொடர்ந்து பிறந்து செத்திருக்கின்றார்கள். ஆகையால் இந்த நாவல் எழுதியவர் என்னுடைய முப்பாட்டன் என்று சொல்லவேண்டும். அவர் எழுதிய நாவலில் நான் அக்கறைகொள்ள முடியாது. அந்த ஷாவைப் பற்றி என் நினைவும் மங்கிவிட்டது; உள்ள நினைவும் எத்தனையோ பொய்கள் கலந்து திரிந்ததாக உள்ளது. ஆகையால் அவரைப்புற்றி எனக்குத் தெளிவாகவும் முழுமையாகவும் தெரியாது" என்று வேடிக்கையாக எழுதுவதிலும் உண்மை தோன்றச் செய்துள்ளார். இத்தகையவர் செருக்குக் கொண்டவர் என்று எப்படிக் குறைகூறுவது?

## எள்ளி நகையாடுதல்

ஷாவினிடத்தில் எள்ளல் மிகுதியாகக் காணப்படுவது உண்மை. இந்தத் துறையில் அவர் பெயர் போனவர், பிறரை எள்ளிக் குறைகூறியும் கிண்டலாகத் தாக்கியும் அவர் பேசும் பேச்சுக்களிலும் எழுதும் எழுத்துக்களிலும் உள்ள கோணல் அவருக்கே தெரியும். "என் தொழிலே இதுதான். உங்கள் நிலைமையை அறிந்து உங்களை நோக்கி நீங்களே சிரித்துக்கொள்ளச்செய்வதே என் நோக்கம். உங்களைச் சில வேளைகளில் முட்டாள்கள் என்று உணர்ந்து கொள்ளுமாறு செய்திருப்பேனானால், அதனாலேயே உங்கள் தவறுகளைக் களைந்து திருத்தியுள்ளேன் என்று நினைத்துக் கொள்ளுங்கள். பல் மருத்துவர் உங்கள் பல்லைக் களைந்தெறிந்து பல்நோயைத் தீர்க்கவில்லையா? அதுபோன்றதே இதுவும்" என்று நாடகங்களின் முகவுரையில் எழுதியுள்ளார்.

ஷா வாழ்க்கையைத் தொடங்கும்போது இந்தப் பேர்க்கு இல்லை. அவருடைய நாவல்களில் இது காணப்பட

வில்லை. ஆனால் நாடகங்களில்தான் இது மெல்ல மெல்லத் தலைகாட்டி ஓங்கி வளர்ந்துவிட்டது. அதனால்தான் ஷா கோணலான அறிவாற்றல் உடையவர் என்று பலரும் நெருங்கிப் பழக அஞ்சுகின்றார்கள். பழக்கவழக்கங்களின் போலித்தன்மையை உணர்ந்து உணர்ந்து உலகப்போக்கிற்கு அடியோடு மாறுபட்ட வழியில் தம் வாழ்க்கையை அமைத்துக்கொண்டதே இதற்குக் காரணம்.

மற்றொரு காரணம் அவர் வாழும் ஆங்கில நாட்டு மக்களின் தன்மை. பொறுமையாகவும் நேர்மையாகவும் மரபு நெறி தவருமலும் சொல்கின்ற எதையும் ஆங்கிலேயர் பொருட்படுத்தாததையும், நகைச்சுவை எங்கே எந்நிலையில் இருந்தாலும் அதை நாடி அலைந்து அனுபவிப்பதையும் கண்ட பிறகே, அவர் இந்தப் போக்கைக் கையாண்டார்; அதனால் ஆங்கில மக்களின் கண்ணையும் செவியையும் தம் பக்கம் திருப்பி வெற்றியும் பெற்றார். எள்ளி நகையாடினால் அல்லாமல் ஆங்கிலேயர்கள் எதையும் எண்ணிப்பார்க்க முன் வரமாட்டார்கள் என்று அவர் நம்பிய நம்பிக்கை உண்மை ஆயிற்று. இந்தப் போக்கால் ஷா நாடக உலகில் அழியாப் புகழ்பெற்ற போதிலும், அரசியலில் செல்வாக்குப் பெற்று முன்னேற முடியவில்லை. வெல்ஸ் போன்ற அறிஞரே அந்த நாட்டுத் தேர்தலில் இருமுறை நின்று தோற்றாரே எனலாம். வெல்ஸ் தோற்றாலும் அரசியலாரிடத்தில் செல்வாக்கு உடையவராக விளங்கினர். ஷாவுக்கோ அரசியலில் அவ்வளவு செல்வாக்கு இல்லை; ஆனால் அறிவுலகத்தில் மட்டும் அழியாச் செல்வாக்கு உள்ளது.

## நாடகம் - நோக்கம்

“ இங்கிலாந்தில் உள்ள நாடக அரங்குகள் என்ன என்ன பற்றியோ கூறும் நாடகங்களுக்கு இடம் தருகின்

றன. ஆனால் மக்களின் வாழ்க்கைக்கு வேண்டிய பொது அறிவு, சமயம், விஞ்ஞானம், அரசியல், ஒழுக்க உணர்வு ஆகியவற்றிற்கு இடம் தருவதில்லை. அதனால்தான் நான் நாடக அரங்குகளோடு போர் தொடுத்திருக்கின்றேன். அறிக்கைகளும் அறவுரைகளும் கட்டுரைகளும் எழுதி அவற்றோடு போர் செய்யவில்லை. நாடகங்கள் எழுதியே அந்தப் போரை நடத்துகின்றேன். இதனால் லண்டன் நகர மக்கள் நாடகம் காணச் செல்லும்போது மனச் சான்றையும் மூளையையும் உடன்கொண்டு செல்லுமாறு செய்யமுடியும் என்று நம்புகின்றேன். இப்போது வழி பாட்டுப் (பைபில்) புத்தகத்தோடு மனச்சான்றையும் மூளையையும் வீட்டிலேயே வைத்துவிட்டு நாடகம் காணச் செல்லும் போக்கை ஒழிக்கவே இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன்" என்று 'வாரன் அம்மையாரின் தொழில்' (Mrs. Warren's Profession) என்னும் நாடகத்தின் முகவுரையில் எழுதியுள்ளார். வீட்டின் உள்ளேயே அடங்கி உலகம் அறியாமல் வாழும் பூச்சி களுக்கு உண்மை வாழ்வு இல்லாவிட்டாலும், கற்பனை யுலகிலாவது அவர்கள் அந்த வாழ்க்கையை உணரட்டும் என்றே நாடகங்களை நடிக்கச் செய்ததோடு நிற்காமல் நூல்வடிவாகவும் வெளியிடுகின்றாராம்.

இந்த நாடகங்களைவிட நீண்ட முகவுரைகள் எழுதி வெளியிடுவது அவருக்கு வழக்கமாகிவிட்டது. வெறுங் கட்டுரைகளை ஒருவரும் படிப்பதில்லை. ஆகையால், தம் கொள்கைகளை உணர்த்தி அவர்களைத் திருத்த வேறு வழி இல்லாதது கண்டு, நாடகங்களின் வழியாகக் கவர்ச்சி ஊட்டி, பிறகு முகவுரைகளின் வாயிலாகக் கொள்கைகளை உணர்த்தும் முயற்சியில் ஈடுபட்டார்.

தம்முடைய கற்பனைகளில் உள்ளவை மிக மாறானவை களாகவும் பொருந்தாதவைகளாகவும் இருக்கின்றன

என்று குறை கூறுவோருக்கு ஷா மறுமொழி கூறும் போது, தாம் கண் மருத்துவர் ஒருவரிடத்தில் சென்று வந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு விளக்குகின்றார். அந்தக் கண் மருத்துவர் ஷாவின் கண்களை ஆராய்ந்து பார்த்து விட்டு, அவருடைய கண்ணைப் பற்றித் தமக்கு ஒன்றும் அக்கறையே தோன்றவில்லை என்று தள்ளிவிட்டாராம். காரணம் கேட்டால், கண் அளவான நிலையில் உள்ளது என்று சொன்னாராம். அப்படியானால் தம் கண் மற்றவர்களின் கண்ணைப் போல் இருப்பதாக ஷா பொருள் கொண்டாராம். கண் மருத்துவர் அதை மறுத்து, "இல்லை இல்லை. மற்றவர்களின் கண் பெரும்பாலும் இப்படி இருப்பதில்லை. உங்கள் கண் தனிவகை. மிக நல்ல கண் பார்வை இருக்கின்றது. அளவான நிலைமை என்றால் பொருள்களை உள்ளபடியே பார்த்தறியும் ஆற்றல். நூற்றுக்குப் பத்துப் பேருக்குத்தான் இது உண்டு" என்றாராம். இதைக் குறிப்பிட்டுவிட்டு, ஷா எழுதும் போது, "அப்போதுதான் நான் கற்பனைகளை எழுதி வெற்றி பெறாதற்குக் காரணம் உணர்ந்தேன். என் உடம்பில் உள்ள கண்ணைப் போலவே, என் மனக்கண்ணும் (கற்பனைக் கண்ணும்) அளவான நிலையில் உள்ளது. பெரும்பாலானவர்களுக்கு மனக்கண்ணும் கெட்டிருக்கின்றது. அதனால் தான் நான் உலகத்தைப் பார்த்தறியும் முறை அவர்களுக்குப் பிடிக்கவில்லை" என்று தொடக்கத்தில் (1898 - ல்) தம் முயற்சியைப் பற்றி எழுதியுள்ளார்.

## உரையாடும் திறமை

ஷாவின் அறிவின் ஆழத்தைக் கண்டும் ஆற்றலை உணர்ந்தும் வியப்பது போலவே, அவருடைய பேச்சில் குலவும் வேடிக்கை, நகைச்சுவை, தயங்காத் திறமை முத

லியவற்றைக் கண்டும் வியப்படைய நேர்கின்றது. "ஏன் குடியை வெறுக்கின்றீர்கள்?" என்பதற்கு விடையாக ஷா கூறியது அவருடைய திறனைக் காட்டுவதாகும். "என் குடும்பத்தில் இருந்த முன்னோர் என் போல் பலருடைய பங்குகளையும் சேர்த்துத் தாங்களே குடித்துவிட்டிருக்கிறார்கள். ஆகையால் எனக்கு மதுவில் பங்கு இல்லாமல் போயிற்று" என்பதே அந்த விடை.

காந்தியடிகளின் மகனார் தேவதாஸ் 1946 - ல் லண்டனுக்குச் சென்று ஷாவைக் கண்டபோது அவர் காந்தியடிகளின் வயதைப் பற்றிக் கேட்டார். வயது 76 என்று விடை வந்ததும், "ஓ! அது ஒன்றும் இல்லை. அவர் இன்னும் சின்ன குழந்தைதான்" என்றாராம்.

இங்கிலாந்தின் அறிஞர் ஜி. கே. செஸ்டர்டன் என்பவர் மிகப் பருமனானவர். ஷா, உடம்பில் கொழுப்பு ஏறாமல் மிக விழிப்பாக இருந்து நடை முதலான பயிற்சிகளால் உடம்பைக் காத்துக்கொள்பவர்; அதனால் மிக ஒல்லியானவர். செஸ்டர்டன் ஷாவைக் கண்டு, "உன்னை யாராவது பார்த்தால், இங்கிலாந்தில் பஞ்சம், வந்திருந்ததாக எண்ணிக்கொள்வார்கள்" என்றார். அதற்கு மறுமொழியாக உடனே ஷா, "உன்னைப் பார்த்தால் பஞ்சம் வந்ததற்குக் காரணமும் தெரிந்துகொள்வார்கள்" என்றார்.

இஸிடோரா டங்கன் என்று புகழ்பெற்ற அழகி ஒருத்தி இருந்தாள். அவள் ஒருமுறை ஷாவைக் கண்டபோது, தான் அழகில் சிறந்திருப்பதாலும் ஷா அறிவில் சிறந்திருப்பதாலும் இருவரும் மணந்தால் அழகிலும் அறிவிலும் இணையற்ற குழந்தை பிறக்கும் என்று கூறினாளாம். அதற்கு உடனே ஷா, "ஆனால், என்னுடைய அழகும் உன்னுடைய அறிவும் அந்தக் குழந்தைக்கு அமைந்துவிட்டால் என்ன செய்வது?" என்று கேட்டுத் திணற

வைத்தாராம். அந்த அழகி அறிவற்றவள் என்பதையும் அதன் வாயிலாக உணரச் செய்தாராம்.

## எளிமை, இனிமை

தம் அறிவாற்றலால் உலகத்தைக் கலக்கும் வகையில் வெற்றி கண்ட ஷா, தனிப்பட்ட முறையில் எளியவராக வும் இனியவராகவும் அமைதியானவராகவும் மென்மையா னவராகவும் விளங்குகின்றார். அவர் உண்ணும் உணவு, உடுக்கும் உடை முதலியவற்றில் எளிமையும் விளங்குகின் றது; புதுமையும்விளங்குகின்றது. அவர் தம்உடலில் சோப் பும் தேய்த்துக்கொள்வதில்லை. உணவில் எந்த வகையிலும் புலால் சேர்ப்பதே இல்லை. காய்கனிகளும் ரொட்டியுமே அவருடைய வழக்கமான உணவு. தம் சொந்தத் தோட் டத்துக் காய்களையே பெரும்பாலும் உணவாகக் கொள் கின்றார். சுருட்டு முதலிய புகைகளை அறவே வெறுப்பவர் அவர். மது வகைகளைத் தொடுவதே இல்லை. புட்டிகளில் அடைத்து வரும் பழச் சாறுகளையும் அவர் பருகுவதில்லை. அவற்றில் மது கலக்காவிட்டாலும், இரசாயனப் பொருள் கள் கலந்துள்ளன என்று விலக்கிவிடுகின்றார்.

மரக்கறி உணவே புலவர்களுக்கும் தத்துவ ஞானி களுக்கும் உரியது என்றும், மற்றவர்கள் வேண்டுமானால் புலால் உண்ணலாம் என்றும், மரக்கறியை உணவாகக் கொண்டவர்களே நீண்ட நேரம் களைப்பின்றி உழைக்க வல்லவர்கள் என்றும், அதனால் மற்போர் (குத்துச் சண்டை) முதலியவற்றிலும் அவர்களே வெல்ல முடியும் என்றும் ஷா கருதுகின்றார். விலங்குகளைச் சார்ந்து அவற்றை நம்பி வாழும் வாழ்க்கை மக்களுக்கு இருக்கக் கூடாது என்றும், விலங்குகளோடு பழகப் பழக அவற்றின் தன்மையும் மக்களுக்கு அமைந்துவிடும் என்றும், விலங்கு களை மேய்த்து வளர்க்கும் வேலையாட்களுக்கு அவற்றின்

முக அமைப்பும் வந்து சேர்கின்றது என்றும் அவர் வேறு பல காரணங்களையும் கூறுகின்ருர்.

## ஆடம்பரத்தில் வெறுப்பு

எளிய வாழ்க்கையை மேற்கொண்டுள்ள ஷா செல்வர்களின் ஆடம்பர வாழ்க்கையைக் கண்டு மற்றவர்கள் ஏமாந்து போகக் கூடாது என்று அறிவுறுத்துகின்ருர். ஏழைகள் பல நாள் பாடுபட்டு விடுமுறை நாட்களில் ஒரு வாரமோ, அரைநாள் பொழுதோ, அல்லது ஒரு மணி நேரமோ இன்பமாக வாழ முயன்று, சேர்த்ததை யெல்லாம் உல்லாசப் பயணத்திலும் உணவு விடுதிகளிலும் செலவு செய்துவிடலாம்; கிடைக்காமல் கிடைத்திடும் மாறுதலான வாழ்க்கை ஆகையால், அந்தப் பொழுது போக்கில் உள்ள துன்பங்களையும் தொல்லைகளையும் மக்கள் நெருக்கத்தையும் களைப்பையும் பொருட்படுத்தாமல் மகிழ்வதாக நடிக்கிருர்கள் என்று ஷா கருதுகின்ருர். உண்மையாகவே செல்வர்களின் ஆடம்பர வாழ்க்கை வாழ்வதாளுல், அதில் இன்பத்தையோ, உடல் நலத்தையோ, உரிமையையோ காண முடியாது என்பது அவர் கருத்து.

" எட்டாத பழத்திற்குக் கொட்டாவி விட்டுப் புளிக்கின்றதாகக் கூறி ஒதுங்குவதாக என்மேல் ஒருவரும் குறை கூற முடியாது. கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக நான் உழைக்கவேண்டிய கட்டாய நிலைமையில் இல்லை. எனக்கு அத்தகைய பொருளாதாரக் குறையோ வேறு காரணமோ ஒன்றும் இல்லை. ஆளுல் அறிவுள்ள செல்வர்களைப் போல் நானும் பாடுபட்டு உழைத்திருக்கின்றேன். ஆயினும் உண்பதிலும் குடிப்பதிலும் உடுப்பதிலும் என் நிலைமை பழையபடியே இருக்கின்றது; மாறுதல் ஒன்றும் இல்லை. என் சட்டைப் பைகள் வறண்டிருந்த போதும், லண்டன் கடைகளில் ஆடம்பரப்

பொருள்கள் ஒன்றும் வாங்கியதில்லை. அப்போது வாங்குவதற்குப் பணம் இல்லை. ஆனால் பிற்காலத்தில் பணம் நிறைய வைத்திருந்த போதும், அத்தகைய பொருள்களை வாங்கவில்லை. நாள்தோறும் அவ்வகையான பொருள்களை வாங்காமலேயே வீட்டுக்குத் திரும்பியிருக்கின்றேன். நான் பற்று அற்ற துறவியோ அல்ல. தன்னைத் தான் ஒறுத்துக்கொள்வதால் தெய்வத்தின் அருளைப் பெற முடியும் என்றோ, இறந்தபின் கிட்டும் மறுமையில் உரிமை மிகும் என்றோ எண்ணும் கற்பனையும் என்னிடம் சிறிதும் இல்லை. நான் விரும்பினால் செல்வர்களின் ஆடம்பர வாழ்க்கை வாழ்வேன்; வாழ முடியும். ஆனால் நான் அந்த வாழ்க்கையை விரும்பவில்லை. அதனால் அவ்வாறு வாழவில்லை. இது ஒன்றே காரணம். அன்றாட நடைமுறையிலும் அந்த வாழ்க்கையை விடாமல் ஆராய்ந்துவருகின்றேன்; அதன் பிற்கால விளைவுகளையும் விடாமல் கண்டு வருகின்றேன். அத்தகைய வாழ்க்கை ஓர் ஆண்டு வாழ்வேனானால், என் கற்பனையிலும் காணமுடியாத அவ்வளவு துன்பமான நிலைமை வந்து சேரும் என்பதை நான் அறிவேன். சோம்பல் மிக்க செல்வரைப் போல் பல நாட்களில் பிற்பகல்களைக் கழித்திருக்கின்றேன். அதனால் அது எத்தன்மையானது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். தற்கொலை போலவே அது எனக்குத் தோன்றுகின்றது" என்று (1931-ல்) தெளிவாக்கியுள்ளார். அதனால்தான் அவர் எளிமையில் செம்மையான நல்வாழ்வைப் போற்றிவருகின்றார்.

## வறுமையின் பகைவர்

எளிமையில் செம்மை வேண்டும் என்று போற்றி வாழ்ந்தாலும், வறுமையைக் கண்டு ஆறுதல் அடையும் தன்மையோ, செல்வத்தைக் குறித்துக் கவலையற்றிருக்கும்

தன்மையோ ஷாவிடம் முன் இருந்ததும் இல்லை ; இப்போதும் இல்லை. வறுமையே பாவங்களில் பொல்லாதது என்றும், வறிய நிலையில் வாழ்வதே கொடிய பாவ வாழ்க்கை என்றும், அந்தப் பாவத்தைப் போக்கிக்கொள்வதே முதல் கடமையாகக் கொள்ள வேண்டும் என்றும் திரும்பத் திரும்ப விளக்கியுள்ளார். பணமே உலகத்தில் மிகச் சிறந்த பொருளாக உள்ளது ; ஆகையால் தனி வாழ்க்கையானாலும், அல்லது நாட்டு வாழ்க்கையானாலும் இந்த அடிப்படையிலே அமைந்தால்தான் நன்மை எதுவும் நிலைக்கும், வெற்றியும் பெறும் என்பது அவர் கொள்கை. எழுதும் நூல்களில் எல்லாம் அவர் வறுமையின் பொல்லாத பகைவராக விளங்குகின்றார்.

இசைக்கலையில் ஷாவுக்கு அளவு கடந்த ஆர்வம் உண்டு. கல்வி முறையில் இசைக்குப் பெரும் பங்கு இருக்க வேண்டும் என்றும், அதுவே அடிப்படையாக அமைய வேண்டும் என்றும் விரும்புகின்றவர் அவர். ஓவியக் கலையிலும் அவர் வல்லவர். தம் நாடகத்தில் வரும் காட்சிகள் பலவற்றிற்கு அவரே தம் கைப்பட ஓவியங்கள் வரைந்திருக்கின்றார். தம் தாயின் முழுவடிவ ஓவியத்தையும் தாமே எழுதிவைத்திருக்கின்றார். நாடகம் எழுதுவதில் உலகப் புகழ் பெற்றவர் ; நடிக்கவும் தெரிந்தவர். இவ்வாறு பல கலையின் பெருமையை நன்கு உணர்ந்து போற்றும் அவரே, இளைஞர்க்கு அறிவுரை கூறும்போது, இக்காலத்தில் பணமே உலக வாழ்க்கையின் அடிப்படையாக விளங்குவதை மறக்காமலிருக்குமாறு அறிவுறுத்துகின்றார் : " இளைஞர் (ஆணாயினும் பெண்ணாயினும்) இசை முதலியவை கற்றுக் கலைஞர் ஆக விரும்பக்கூடும். அது வேண்டாம் என்று தடுக்கின்றேன். வியாபாரம் செய்யலாம். பங்கு மார்க்கெட்டில் தேர்ச்சி பெறலாம். பெண்கள், கலையை நாடி மயங்க வேண்டாம். வியாபாரியையோ

பங்குவாணிகம் செய்வோரையோ மணந்து கொள்ள வேண்டும்" என்று அவர்களுக்கு அறிவுரை கூறி, அதன் வாயிலாக இன்று உள்ள உலக அமைப்பைக் கடுமை யாகத் தாக்கியுள்ளார்.

## பெண்கள் முன்னேற்றம்

பெண்களின் முன்னேற்றத்தில் ஷாவைப் போல் உண்மையான அக்கரை கொண்டவர்களைக் காண்பது அரிது. அவருடைய நாடகங்களில் பெண்களைப் புனைந்து கூறுவதும் புகழ்வதும் இல்லை. ஆனால் அவர்களுடைய ஆற்றல் சிறந்து தோன்றுமாறு பல நாடகங்கள் எழுதி யுள்ளார். அவருக்குக் கண் போன்ற கொள்கையாகிய கூர்தலறம் (Creative Evolution) தாய்மையின் அடிப் படை கொண்டது. அவர் அடிக்கடி விளக்கும் உயிராற் றல் (Life Force) பெண்ணின் தாய்மையாகவே வடிவு கொள்கின்றது என்று மதித்து எழுதியுள்ளார். ஆண் பெண் போராட்டத்தை விளக்கும் அவர், பெண்ணுக்கே எப்போதும் வெற்றி எனக் காட்டுகின்றார். 'மனிதனும் உயர்நிலை மனிதனும்' (Man and Superman) என்னும் நாடகத்தில், உயிராற்றல் பெண்ணின் வாயிலாக நின்று ஆணைக் கவர்ந்து அவனைக் கருவியாகப் பயன்படுத்துகின் றது என்னும் கருத்தை விளக்குகின்றார். அந்த நாடகத் தில் வரும் ஜான் டானர் என்பவன், "சிப்பாய் ஒருவன் துப்பாக்கியைப் போற்றுவது போலவும், இசைக்கலைஞன் வீணையைப் போற்றுவது போலவும், பெண் தன் கணவ னைப் போற்றுகின்றாள்" என்று கூறுகின்றான். பெண்ணே ஆணைப் படைத்து வளர்ப்பவள் என்றும், பெண்ணே ஆணை ஆட்கொண்டு வாழ்விப்பவள் என்றும் அங்கங்கே ஷா புலப்படுத்திச் செல்கின்றார். இவ்வாறு கொள்கையை

விளக்குவதோடு நிற்காமல் உண்மையாகவே அவர் பெண்களிடத்தில் மதிப்புக் கொண்டவராய் விளங்குகின்றார்.

"உலக நடவடிக்கைகளில் பெண்கள் முழுப் பங்கும் ஏற்று உழைத்தால் அல்லாமல் உலகம் ஒருநாளும் நல்ல அமைதியான நிலைமையை அடைய முடியாது. இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் காமன்ஸ் சபையில் உள்ள அறு நூறு உறுப்பினர்களில் நாற்பது பேரே பெண்கள். இந்த நிலை போதாது. எல்லா இடங்களிலும் ஆண்களும் பெண்களும் சமநிலையாக, நூற்றுக்கு ஐம்பது ஐம்பதாக இடம் பெற வேண்டும். இதற்கு ஒரு சிறந்த வழி உண்டு என்று நான் நினைக்கின்றேன். அதாவது, தேர்தலில் வாக்குரிமை அளிக்கும்போது, ஒவ்வோர் ஓட்டும் ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்குமாக அளித்தால்தான் செல்லும் என்று ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று அவர் கூறியுள்ளார்.

இதையே வேறுவகையாக மற்ருேரிடத்தில் சொல்லும் போது, "மக்களாட்சியாக நடைபெறும் அரசியலில் ஆண்களும் பெண்களும் ஒத்த எண்ணிக்கை உடையவர்களாய் இடம் பெற வேண்டும். ஏன் தெரியுமா? பெண்களுக்கு உள்ள ஏராளமான ஆற்றலை அவர்கள் பொதுவாழ்க்கையில் பொறுப்புணர்ந்து பயன்படுத்த வேண்டும். அவர்களுடைய ஆற்றலும் பொதுமக்களின் சீர்தூக்கலுக்கு இடைவிடாமல் ஆளாகவேண்டும் என்று நான் விரும்புகின்றேன். பொதுக்கடமைகளில் இருபாலாரும் ஈடுபடக் கூடாது என்றும், ஒரு பாலார்க்கு மட்டுமே இடம் இருக்க வேண்டும் என்றும் ஏற்பட்டால், நான் அவற்றைப் பெண் பாலாரின் பொறுப்பிலேயே விட்டுவிட வேண்டும் என்று கூறுவேன். ஆண்களுக்கு உணவு அளித்து வளர்ப்பதிலும் ஆள்வதிலும் அவர்கள் பயிற்சி பெற்றிருக்கிருர்கள்; அந்தப் பயிற்சியால் அவ்வகைத் திறமை அவர்களுக்கு இயற்கையுணர்வு போல் ஆகிவிட்டது. ஆனல் ஆண்களோ

ஏப்போதும் பெண்களை ஆள முடிந்ததில்லை. ஆகையால் பெண்பாலாரின் பொறுப்பில் பொது வாழ்க்கையை விடுவதுதான் சிறந்தது. என்னைப் பொறுத்த வரையில் என் வாழ்நாள் முழுதும் நான் பெண்களின் உதவியைப் பெற்றுச் சார்ந்தவனாகவே இருந்துவந்திருக்கிறேன். இதை நான் நன்றாக உணர்கின்றேன். அவர்களுடைய அன்புக்கும் ஆதரவுக்கும் உரியவனாக நான் நடந்துகொள்ளாவிட்டால், அவர்கள் விழிப்புப் பெற்று என்னால் இனிப் பயனில்லை என்று கண்டபோது பெண் தேனீக்களைப் போல் என்னை ஒழித்துவிடுவார்கள் என்பதையும் நான் நன்கு அறிவேன். ஆகையால் பெண்பாலார் மட்டுமே நடத்துமாறு ஏற்படும் அரசியலில் ஓர் ஆபத்தும் உள்ளது: பெண்கள் ஆண்களைவிட அதிகாரத்தை மிக விரும்புகின்றவர்கள்; அதனால் ஆண்கள்மேல் பொறாமை கொண்டு அவர்களை அளவுக்குமேல் உண்ணவும் உடுக்கவும் செய்து புகழவும் புகழ்ந்து முழுதும் பயனற்றவர்களாக்கி வாக்குரிமை இழந்துவிடச் செய்துவிடுவார்கள். இந்த இடையூறு இருப்பதால் நூற்றுக்கு ஐம்பது ஐம்பதாக இருபாலாரும் இடம் பெறுவதே நல்லது'' என்று கூறியுள்ளார்.

மண முறிவுகளைக் குறைப்பதற்கு வழி கூறும்போது, மண முறிவுக்காக நீதிமன்றங்களில் வழக்குத் தொடரும் போது, கணவனையும் மனைவியையும் நோக்கி "ஏன் பிரிந்துவிட விரும்புகின்றீர்கள்?" என்ற ஒரு கேள்விமட்டும் கேட்கவே கூடாது என்றும், தடை இல்லாமல், மண முறிவு அளிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்துகின்றார். "ஏன்" என்று கேட்கும் வழக்கம் இருப்பதால் ஒருவர் ஒருவரைப் பற்றிக் குறைகூறுவதற்காக முன்வருகின்றார்கள் என்றும், அதற்காகப் பொய்யும் புனைவும் கற்கின்றார்கள் என்றும், அவற்றை உலகத்தாரும் விரும்பி எதிர்

பார்க்கின்றார்கள் என்றும், "ஏன்" என்ற கேள்வியே ஒழிந்தால் எல்லாம் சீர்ப்படும் என்றும், வழக்குகளே குறையும் என்றும் கருதுகின்றார். பெண்களுக்குப் பொருளாதார உரிமை வந்தால் பெண்களின் பிற்போக்கும் அடிமைத் தன்மையும் அறவே ஒழியும் என்றும், போலி மணமும் அழியும் என்றும் அவர் கருதுகின்றார். பறவைகள் கூடுகளிலிருந்து பறந்து போவதுபோல் குழந்தைகள் போதுமான வளர்ச்சி பெற்ற பிறகு தாய்மாரிடமிருந்து பிரிந்துபோக விடவேண்டும் என்பதும், அதுவே தாய்மைக்குக் கடமை என்பதும் அவர் கருத்துக்கள்.

அறிஞர் ஷா நாற்பது வயதிற்குமேல் திருமணம் ஆனவர்; தம் துணைவியாருடன் அமைதியான அன்பு வாழ்க்கை வாழ்ந்தவர்; குழந்தை இல்லாதவர். அத்தகையவர் குடும்ப வாழ்க்கை திருந்த வேண்டும் என்னும் நல்லெண்ணத்தோடு எழுதும் எழுத்துக்களில் புரட்சியோடு உண்மையும் ஆர்வமும் கலந்து விளங்கக் காண்கின்றோம்:—

"நடுத்தர வகுப்பே மிகக் கேடான வகுப்பு. அந்த வகுப்பில் பெண்களுக்கு மனைவிநிலையும் தாய்நிலையும் தவிர வேறு தொழில் இல்லை; தொழில் இல்லாத பெண்களுக்கு வாழ வழியும் இல்லை."

"ஒவ்வொரு குடும்பத்திலும் பெண்களுக்குத் திருமணப் பருவம் வந்த பிறகு, கணவன்மாரைத் தேடித் திரியும் வேட்டை வழக்கமாகிவிட்டது. இது மனிதத் தன்மைக்கே இழுக்காக இருக்கின்றது. ஆனால், இப்போதுள்ள சமூக அமைப்பில் இதைத் தவிர வேறு வழி இல்லை. இவ்வாறு தேட மறுத்துவாளா இருக்கும் பெற்றோர் நல்ல பெற்றோர் அல்ல. அவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்களாக வாழ்ந்தாலும் பயன் இல்லை."

"திருமணம் வேண்டும் என்று பெண்கள் மட்டும் விரும்பவில்லை. ஆண்களும் விரும்புகின்றார்கள். சிலர்

திருமணம் நல்லது என்ற உணர்வினுல் விரும்புகின்ருர்கள். சிலர் தனி வாழ்க்கையில் செலவும் மிகுதி, நலமும் குறைவு என்று பயனை அளந்து கணக்கிட்டு, மனைவியால் வீட்டுக் கடமைகள் பெருஞ்செலவு இல்லாமல் நிறைவேறுவதால், பயனுள்ளது என்று கண்டு திருமணம் செய்து கொள்கின்ருர்கள்."

" குழந்தை இல்லாதவர்கள் செய்துகொள்ளும் மணமுறிவே மற்றவற்றைவிட மிகுதியாக இருக்கின்றது. குழந்தைகள் பெற்ருேரின் மண முறிவுக்குத் தடையாக இருக்கின்றன. பெற்ருேர் இருவர்க்கும் குழந்தைகளிடத்தில் பொதுவான அக்கரை இருப்பதே அதற்குக் காரணம். குழந்தைகள் இல்லையானுல், எத்தனையோ குடும்பங்களில் கணவன் - மனைவி வாழ்க்கை முறிந்திருக்கும்."

## கருத்துப் புரட்சி

அறிஞர் ஷாவின் எண்ணங்கள் எல்லாவற்றிலும் பெரும் புரட்சி காணப்படுகின்றது. குடும்ப வாழ்க்கையைப் பற்றிக் கூறுவதாலுைம், கல்வி நிலையங்களைப் பற்றிக் கூறுவதாலுைம், சமயக் கொள்கைகளை ஆராய்வதாலுைம், அரசியல் மாறுதல்களை எடுத்துரைப்பதாலுைம், வேறு எதைப் பற்றி விளக்குவதாலுைம், ஷாவின் கருத்துக்கள் பெரும்பாலோருடைய எண்ணப் போக்கிற்கு நேர்மாருகவே காணப்படுகின்றன. ஆனல், உலக வரலாற்றில் பெரிய பெரிய மாறுதல்களையும் நன்மைகளையும் செய்து மக்களைக் காப்பாற்றிய சமயத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் இவ்வாறே புதிய புதிய வழிவகைகளைக் கண்டு புரட்சி செய்திருக்கக் காண்கின்ருேம். ஷாவின் புரட்சிக் கருத்துக்களில் சில திடுக்கிடக் கூடியவைகளாக இருக்கும்; ஷா இவ்வளவு

பொல்லாதவராக இருக்கின்றாரே என்றும் எண்ணச் செய்யும். எடுத்துக்காட்டானவை :

"இன்று சிறையில் அகப்பட்டுக் கிடக்கும் திருடன் மற்றவர்களை விட நேர்மையற்றவன் உண்மையற்றவன் என்று சொல்ல முடியாது. அறியாமையால், சமூக வழக்கத்திற்குப் பொருந்தாத வழியில் திருடியவனே பெரும்பாலும் திருடனாகக் கருதப்படுகின்றான். அவனே சிறைக் கூடத்திற்குச் செல்கின்றான். ஆனால் அவனைப் போன்ற மற்றொருவன் பொருந்திய முறையைப் பின்பற்றுவதால் பாராளுமன்றத்திற்குச் செல்கின்றான்."

"முற்காலத்தில் சமயத் துறையில் புரோகிதர்களிடத்தில் நம்பிக்கை இருந்ததைவிட இக்காலத்தில் வைத்தியரிடத்தில் (டாக்டரிடத்தில்) நம்பிக்கை மிகுதியாக உள்ளது. மக்களுடைய பாவங்களால் பணம் பெருக்கும் ஆற்றல் புரோகிதர்க்கு அவ்வளவாக இருந்ததில்லை. ஆனால் நோய் பெருகும் அளவுக்குப் பணத்தைப் பெருக்கும் வகை வைத்தியர்க்கு உள்ளது. மக்கள் எல்லோரும் பாவம் அற்றவர்களாக இருந்தாலும் புரோகிதர் பட்டினியிருக்க வேண்டிய நிலைமை இருந்ததில்லை ; மக்கள் பாவம் மிகுந்தவர்களாக மாறியபோது புரோகிதர்க்குச் செல்வம் பெருகியதும் இல்லை. வைத்தியத் துறையில் இதற்கு மாறான நிலைமை காணப்படுகின்றது."

"நோய் இருந்தால்தான் வைத்தியர்க்கு வாழ்வு உண்டு என்னும் நிலைமை மாற வேண்டும். இது மக்களுடைய நல் வாழ்க்கைக்கு இடையூறான முறை. இதற்குப் பதில், ஒவ்வொரு வைத்தியரிடத்திலும் சில குடும்பங்களைப் பொறுப்பாக ஒப்படைக்க வேண்டும் ; அந்தக் குடும்பங்கள் நோயில்லாமல் வாழச் செய்வதற்குத் தக்க அளவில் அவருக்கு வருவாய் உண்டு என்னும் நிலைமை ஏற்பட வேண்டும்."

சில புரட்சிக் கருத்துக்களை ஷா கூறும்போது, படிப்போரின் எண்ணங்களை நன்ருகத் தூண்டிவிடுகின்ருர்; எண்ணி எண்ணி அவருடைய கருத்திற்கு உடன்படுமாறு செய்கின்ருர். பின்வருபவை அத்தகையவை:

"ஒரு பக்கம் ஆள்வோர் தம் ஆணைகளுக்குக் காரணம் கூறி விளக்காமல் இருக்க, மற்ருெரு பக்கம் காரணம் கூறினுலும் தெரிந்துகொள்ள முடியாத பொதுமக்கள் இருந்தால், என்ன செய்யமுடியும்? அரசியல், தொழில், குடும்பம் என்பவற்றில் உள்ள ஆட்சிமுறை பெரும்பாலும் ஆணையிடுவதாலும் ஆணைக்குக் கீழ்ப்படிவதாலுமே நடைபெறவேண்டி யிருக்கின்றது. 'காரணம் கேட்காதே, சொன்னபடி செய்' என்னும் மொழிகளைக் குழந்தைகளிடத்திலும் படைவீரர்களிடத்திலும் சொல்வது போலவே, ஏறக்குறைய எல்லோரிடத்திலும் சொல்ல வேண்டி யிருக்கின்றது. நல்ல காலமாக, மக்களில் பெரும்பாலோர் காரண ஆராய்ச்சியை விரும்புவதில்லை; எண்ணுவது ஒரு தொல்லை என்று அதற்கு இடம் தராமல் தப்பி மகிழ்கின்ருர்கள். திறமை மிக்க சிறந்த சிந்தனையாளர்களோ, அவர்களுக்குத் தெரிந்த துறையில் மட்டும் எண்ணிப்பார்த்து அவ்வளவில் அமைதியோடு இருக்கின்ருர்கள். மற்றத் துறைகளில் தயங்காமல் போலீஸ்காரன், தையற்காரன் முதலானவர்கள் கூறும் வழிகளைக் கேட்டு அப்படியே ஏற்றுக்கொள்கின்ருர்கள். விளக்கம் கேட்பதும் இல்லை; சொன்னுல் விரும்புவதும் இல்லை."

"நாகரிகப் பழக்கமுறை மிகுந்த இடங்களில், சமய உணர்வு இல்லாதவர்கள் கோயிலுக்குப் போவதும், இசை உணர்வு இல்லாதவர்கள் இசைக் கழகங்களுக்குப் போவதும், நாடகச்சுவை உணராதவர்கள் நாடக அரங்குகளுக்குச் செல்வதும் மிகுதியாக உள்ளன. அவற்றின் பயனுக, கோயில் வழிபாட்டுரை பத்து நிமிஷங்களில்

சுருக்கமாக நடத்தும் அளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கின்றது; நாடகங்களும் இரண்டு மணி அளவுக்குக் குறைக்கப் பட்டிருக்கின்றது. எனக்கு இதைப் பற்றிக் கவலை இல்லை. கணக்குத் தெரியாதவர்களைப் பற்றி ஐன்ஸ்டின் எவ்வாறு கவலைப் படுவதில்லையோ, அவ்வாறே நானும் இவர்களைப் பற்றிக் கவலைப் படுவதில்லை."

சில இடங்களில் புரட்சியான கருத்துக்களைக் கூறிய போதிலும் மக்கட்பண்பு உணர்ந்தவராகவும் அருள் நெஞ்சினராகவும் ஷா விளங்கக் காண்கிறோம் :

" சக்கரம் முதலியவற்றில் பட்டவுடனே, காலையோ கையையோ பிய்த்து நசுக்கி எறியும் யந்திரத்தை எந்த மனிதனும் அழிக்க விரும்புவதில்லை. ஆனால் ஒரு மனிதன், மற்றொருவன் சிறுதவறு செய்தபோது, அவனைக் கொல்ல முயல்வது இயல்பாக உள்ளது. காரணம் என்ன? யந்திரம் நம் போன்றது அல்ல ; ஆகையால் அதனிடம் அன்பு செலுத்தவும் முடியவில்லை; பகைக்கவும் முடியவில்லை. ஆனால் தவறு இழைத்தவன் நம் போன்ற மனிதன் ; ஆகையால் இவை முடியும்."

" நம்மைவிடத் தாழ்வாகக் கருதப்படுகின்ற யாரையும் துன்புறுத்தலாம் என்று நம்பும்படியாக நாம் பண்படுத்தப் பட்டிருக்கிறோம். ஏன்? நாம் இளம் பிள்ளையாக இருந்தபோது நம் பெற்றோரும் ஆசிரியரும் நமக்குச் செய்த துன்பங்களால் நாம் பெற்ற அனுபவம் அத்தகையது."

" உயிர்க்காட்சிச் சாலையில் உள்ள விலங்குகளைப் பார்த்துச் சிறைக் கைதி பொறாமைப் படுகின்றான். காரணம் என்ன? நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் விருப்பு வெறுப்பு இல்லாமல் அந்த விலங்குகளைப் பார்க்க வருகின்றார்கள். பார்க்க வருகின்ற அவர்கள் அந்த விலங்குகளைத் திருத்தி மாற்ற வேண்டும் என்று ஒரு முயற்சியும் செய்வதில்லை. சிறைவாழ்வில் இந்த நன்மைகள்

இல்லை. அப்படி இருந்தும், சிறைவாழ்வு அவ்வளவு கொடியதாகக் கருதப்படுவதில்லை. ஏன் என்றால், மக்க ளில் பெரும்பாலானவர்கள் இளமையிலிருந்தே சிறைவாழ் வில் பழக்கப்பட்டவர்கள். பள்ளிக்கூடம் ஒரு சிறை ; தொழில் நிலையம் தொழிற்சாலை ஆகியவைகள் சிறைகள் ; வீடும் சிறைதானே ?''

உலகத்தில் உள்ள எல்லாவற்றிலும் உயர்ந்த மதிப்பு உடையது உயிரே. அதை வீணாக்குவதே குற்றங்களில் கொடிய குறறம். சிறைவாழ்க்கை குற்றவாளியின் உயிரைப் போக்காதிருக்கலாம் ; ஆனால் மிகக் கொடிய வகையில் அந்த உயிரைக் கெடுத்து வீணாக்குகிறது.''

" இன்று உள்ளவாறு பார்த்தால், சிறைச்சாலையின் உள்ளே கிடக்கும் குற்றவாளிகள் செய்த எந்தக் குற்றத்தையும் விடப் பெரியது, அவர்களைச் சிறைப் படுத்துவதே ஆகும்.''

" முரடர்களாகவும் சண்டைக்காரர்களாகவும் உள்ள ஆட்கள் பெரும்பாலும் ஊக்கம் மிகுந்தவர்களாகவும் வேலை குறைந்தவர்களாகவும் இருப்பவர்களே. எனக்குத் தெரிந்த எடுத்துக்காட்டு ஒன்று : மனைவியை அடிக்கும் வழக்கம் உடைய ஒருவன் மேளம் அடிக்கும் தொழில் ஏற்ற பிறகு அந்த வழக்கத்தையே விட்டுவிட்டான்.''

## பழமை - புதுமை

அழுகல் பொருள்களை எடுத்தெறிந்து அப்புறப்படுத் தினால் அல்லாமல் நல்ல பொருள்களை வைத்துக் காப் பாற்ற முடியாதது போல், பழையனவற்றில் சீர் கெட் டவை நீங்கினால் அல்லாமல் நல்ல கொள்கைகளும் நெறிகளும் வாழ முடியாது என்பது அவருடைய கருத்து. பழமை என்னும் காரணம் ஒன்றே பற்றி எதற்கும் சிறப் புத் தரும் வழக்கம் அடியோடு தொலைய வேண்டும் என்று

அவர் விரும்புகின்ருர். இதனுலேயே பழைய கொள்கைகள் எல்லாவற்றையும் அவர் அடியோடு வெறுத்துத் தள்ளுபவர் எனக் கருதக் கூடாது. எடுத்துக் காட்டாக, பைபில் படித்துணரத் தக்க உயர்ந்த நூல் என்று அவர் பாராட்டி எழுதியுள்ளார். ஆனுல் தெய்வீகம் என்னும் நம்பிக்கையோடு படிப்பதால் பயனில்லை என்றும், ஆராய்ச்சி முறையில் இன்றைய அறிவையும் அனுபவத்தையும் கொண்டு அதன் பொருளை உணர வேண்டும் என்றும் கூறுகிருர். எல்லாருடைய கருத்துக்களுக்கும் அடிப்படை ஊற்ருக - அழியா நிலைக்களனுக - இருக்கும் ஒன்று வியக்கத் தக்க பெருமையுடையதே என்றும், ஆகையால் தெய்வீகம் என்று போற்றத் தக்கதே என்றும், ஆனுல் குறை பல உடைய மனிதன் வாயிலாக அது வெளிப்படுவதால் அறியாமையும் மாசும் கலந்திருக்கும் என்றும், இதை உணர்ந்தே எந்த நூலையும் கற்க வேண்டும் என்றும் அவர் ஓரிடத்தில் விளக்கியுள்ளார்.

இவ்வாறு பழமையை விழிப்போடு ஆராயும் ஷா, புதுமையை மட்டும் கண்மூடி ஏற்றுக்கொள்வார் என்று கருத முடியாது. விஞ்ஞானத்தின் பெயரால் உலகத்தில் பரவி வரும் நம்பிக்கைகளில் மூடநம்பிக்கைகளும் சில உண்டு என்பது அவருடைய கொள்கை. பழைய மூடக் கருத்துக்களையே விஞ்ஞானத்தின் பெயரால் கூறிஞல், மக்கள் கண்மூடி ஏற்றுக்கொள்ளக் காத்திருக்கின்ருர்கள் என்று அவர் வருந்தி எழுதியுள்ளார்.

பத்திரிகைகளைப் பற்றியும் அறிஞர் ஷா இதே கொள்கை உடையவர். ஒரு கட்சிப் பத்திரிகையை மட்டும் படிப்பவன் ஒன்றும் உண்மை உணர முடியாது என்றும், தன் கட்சிப் பத்திரிகையைக் காசு கொடுத்து வாங்கும் போதே, மற்றக் கட்சியின் பத்திரிகை ஒன்றையும் வாங்கிச் செல்வதே கடமை என்றும், அப்போதுதான் கண்

மூடிப் பின்பற்றும் அறியாமை நீங்கும் என்றும் அவர் விளக்கியுள்ளார்.

பழைய இலக்கியங்களை மட்டும் போற்றிப் பத்திரிகை களைப் புறக்கணிப்பது தவறு என்பது அவர் கருத்து. புலவர்கள் உலக நன்மைக்காக எழுதும் எழுத்துக்களி லும் பழங் காலத்தையே நினைத்து நிகழ்காலத்தை மறப் பது தீமை என்கின்ருர் : "இன்று மட்டும் அல்லாமல் என் றும் நிலைக்க வேண்டும் என்று ஓர் எழுத்தாளர் எழுது கின்றவை எக்காலத்திற்கும் உதவாதவைகளாக நிற்கின் றன. பிளாடோ, ஷேக்ஸ்பியர் முதலானவர்கள் தம் தம் காலத்தினர்க்கு ஏதேனும் உணர்த்த வேண்டும் என்று முயன்ருர்கள் ; அவர்களுடைய கருத்துக்களே இன்றும் நிலைத்திருக்கின்றன ; இன்னும் பயன் தருவனவாக உள்ளன. ஆனல் கலைத் துறையில் இறுமாந்து வாழ்ந்து தம் காலத்தாரை மறந்து பெருமை பெற முயன்றவர்கள் ஆயிரக் கணக்கில் மண்ணுய் மறைந்தார்கள்."

"எவன் தன்னைப் பற்றியும் தன் காலத்தைப் பற்றி யும் எழுதுகின்ருனே அவனே எல்லா மக்களைப் பற்றியும் எல்லாக் காலத்தைப் பற்றியும் எழுதும் எழுத்தாளன்."

"நான் பல காலத்தைப் பற்றியும் எழுதுகின்றேன். ஆனல் நிகழ்காலம் தவிர வேறு எந்தக் காலத்தைப் பற்றி யும் நான் கற்பதில்லை. அந்த நிகழ்காலத்தையே இன் னும் நன்ருகக் கற்றுத் தேறவில்லை. அதுவே என் வாழ் நாளில் கற்றுத் தேற முடியாததாக உள்ளது."

"ஒருசார் மக்களுக்குப் புனைகதை, நாடகம், இசை ஆகியவை குற்றமானவைகளாகத் தோன்றுகின்றன. இவற்றை அனுபவிப்பதோ ஒழுக்கக் கேடாகத் தோன்று கின்றது. கலையுணர்வு பெற்றவர்களைவிட இவர்களே பெருந் தொகையானவர்கள். அறிவிலும் இவர்களே மிக்கவர்களாக இருக்க முடிந்தால் இலக்கியம் சாகும்."

இவ்வாறு கூறும் கருத்துக்களில் வாழ்க்கையையே கலையாகக் கொண்ட ஷா, அதையே கலைகளில் வாழச் செய்ய வேண்டும் என்று விரும்புவதைக் காணலாம். வாழ்க்கை நன்ருக விளங்கும்வகையில் நாடகம் பல எழுதி, எண்ணும் ஆற்றலை வளர்த்துத் தூண்டும் வகையில் நீண்ட முகவுரைகளும் எழுதி அவர் தொண்டு ஆற்று வதற்குக் காரணம் இதுவே. ஆகையால் பழைய இலக் கியங்களைப் போற்றுவதைவிடப் புதிய இலக்கியங்களைப் படைக்கும் திறமை சிறந்தது என்று பாராட்டுகின்ருர்.

"பழக்க வழக்கங்களைப் பற்றியும் ஷா இத்தகைய கருத்தே உடையவர். எவ்வளவு காலமாகச் சமூகத்தில் ஊறி வந்த பழக்கங்களாலுைம் ஆக்க வேலையாகவும் முன் னேற்றமாகவும் இல்லாதவற்றைக் கடுமையாகத் தாக்கு வது அவருடைய இயல்பு. எடுத்துக்காட்டு :

"வேட்டை முதலிய பொழுதுபோக்கான விளையாட் டுக்களில் மக்கள் இன்பம் காண்கின்ருர்கள். அவற்றி லுள்ள களைப்பும் இடர்ப்பாடுமே இன்பமாக உணரப்படு வன. கொலை நிகழாதபோது வேட்டை என்பது எனக்கு வீண்தொல்லையாகத் தோன்றுகிறது. கொலை நிகழும் போதோ, மனிதனைக் கொல்லும் கொலைக் காட்சி துயர் தருவது போலவே, வேட்டையும் எனக்குத் துயர் தருகின் றது. வளர்ந்த ஒருவனைக் கொல்வதைவிடக் குழந்தையைக் கொல்வது கொடுமை மிகுந்ததாய்த் திடுக்கிடச் செய்ய வில்லையா? (குழந்தை தற்காப்பற்றது, திக்கற்றது. ஆகையால் அந்தச் செயல் கொடுமை மிகுந்தது.) அது போலவே விலங்கைவிட அறிவாற்றல் மிகுந்த மனிதன் விலங்கைக் கொல்வதும் பெற்ற ஆற்றலைக் கொடிய வழியில் வீணுக்குவதாகும்."

"ஒருவன் கொலையில் பொழுதுபோக்கைக் காண்கின் ருன். மற்ருெருவன் ஆக்க வேலையில் அல்லது ஆழ்ந்த

எண்ணத்தில் காலம் கழிக்கின்றான். இவர்கள் இருவரில் எவன் உயர்ந்தவன்?"

"கொலையும் சில இடங்களில் வேண்டும். ஆனால் குற்றமற்ற முறைகள் எத்தனையோ இருக்கும்போது பொழுது போகவில்லையே என்பதற்காகக் கொலை செய்ய வேண்டுமா? மற்ற நேரமெல்லாம் அன்பான நல்ல மனிதனாக நடந்துவிட்டு, பொழுதுபோக்கு என்றதும் கொலையில் ஈடுபட வேண்டுமா? இதில் அறியாமை உள்ளது; அல்லது, செம்மறியாடு போல் கண்மூடிப் பின்பற்றும் சிறுமை உள்ளது என்று கூற வேண்டும்."

"பழக்க வழக்கங்களைத் தெய்வீகம் என்று மதிக்காத மனிதனைப் பொல்லாதவன் என்று மற்றவர்கள் கருதுகின்றார்கள். அவர்களுடைய இயல்பான கோழைத் தன்மையே அதற்குக் காரணம். புதுமைச் சிந்தனையாளன் பழக்க வழக்கங்களை மதிக்கவில்லை என்றால், மற்றவர்கள் சார்ந்திருக்கும் வாழ்க்கையின் அடிப்படையை மதிக்கவில்லை என்றும், அதனால் அமைதி குலையும் என்றும் கருதப்படுகின்றது. தவிர, முன்னிருந்த கடமைகளோடு சேர்ந்து புதிய பல சுமைகளும் அவனால் சமூகத்தில் ஏற்படுகின்றன. மற்றவர்கள் அவனுடைய போக்கைக் கண்டு அஞ்சுவதற்கு உண்மைக் காரணம் இதுவே."

## கலைப் பறவை

பல கலைகளில் தேர்ந்தவராய், வாழ்க்கையை ஒரு தனிக் கலையாகப் போற்றுகின்றவராய் வாழும் அறிஞர் ஷா இன்று உலகத்தின் செல்வமாக விளங்குகின்றார். ஆயினும் அவர் உலகப் புகழைக் கண்டு மயங்குவதில்லை. அவருடைய தொண்ணூறாவது பிறந்தநாள் விழா அன்று காலையில் பத்திரிகையாளர் பலர் அவர் வாழும் சிற்றூருக்குச் சென்று காத்திருந்தார்கள். ஆனால் காலையில் மரக்

கறிச் சிற்றுண்டியை முடித்துவிட்டு, எல்லாச் செய்தித் தாள்களையும் படித்துவிட்டு, வெளியே வந்து அவர்கள் எல்லோரையும் புன்முறுவலோடு விலக்கிக்கொண்டு தம் ரோல்ஸ் ராய்ஸ் மோட்டாரில் ஏறி ஓட்டுவோரின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு எங்கோ மலைப்பக்கமாக விரைந்து சென்றுவிட்டார். அவருடைய வீட்டில் உள்ள ஆட்கள் எவருக்கும் தம் வயதைப் பற்றி அவர் ஒன்றுமே சொல்லவில்லையாம். அந்தச் சிற்றூரில் உள்ள பெண்களும் குழந்தைகளும் நண்பகலில் கை நிறைய மலர்கள் கொண்டுவந்து தம் ஊரின் முதுபெருங் கிழவரின் பிறந்த நாளை வாழ்த்திப் பாடுவதற்காகக் கூடியிருந்தார்கள். ஆனால் அந்தக் கிழவரோ அவர்கள் எல்லோருக்கும் அகப்படாமல் தம் மோட்டாரில் எங்கோ மலைப்பக்கங்களில் சுற்றிக்கொண்டிருந்தார். பழக்க வழக்கங்களுக்கு மாறுபட்டுப் பொதுமக்களுக்கு எட்டாமல் ஓடி இயற்கையை நாடிப் பறந்து திரியும் இத்தன்மை அறிஞர் பெர்னர்ட் ஷாவின் செயல்களில் மட்டும் இல்லை ; எண்ணங்களிலும் இதே தன்மை காணப்படுகின்றது.

# மதிப்புரை சில

## செந்தாமரை

இந்த ஒப்பற்ற நாவல் உண்மையான தமிழ் மறுமலர்ச்சியின் தலை வாயிலுள் நம்மை இட்டுச் செல்கிறது. படிக்கும்போது எழுத்துத் தெரியவில்லை. கலை மெருகேறி, கவிதை நலம் பெற்ற கருத்துப் படங்கள்தான் நம் உள்ளத்திலும் அறிவிலும் தென்பட்டு அவற்றை இன் புறுத்துகின்றன. —சக்தி

* * * *

உலக வாழ்க்கைக்கு ஒவ்வாத சம்பவமே இல்லை. இயற்கையாக நடக்கக் கூடிய சம்பவங்களையே கற்பனைத் திறனுடன் அரிய நவீனமாகச் சிருஷ்டித்திருக்கிறார். —ஹிந்துஸ்தான்

* * * *

நடைச் சிறப்பும் கருத்துப் பொலிவும் கதை அழகும் இந்த நாவலில் மனவியலோடு சேர்ந்து விளங்குகின்றன. —தமிழ் முரசு

* * * *

## கள்ளோ? காவியமோ?

இது வெறுங் கதைக்குவியல் அல்ல; மங்கை, அருளப்பன் என்னும் இரண்டு உள்ளங்களின் உண்மைப் படப்பிடிப்பு. —போர்வாள்

* * * *

படிக்கும்போது ஒரு தனி இன்பத்தைப் பாய்ச்சுகிறது. எளிய சொற்களிலே அன்பையும் அழகையும் சேர்த்து மனத்தில் பதியும்படி கதை புனைந்துள்ளார். —பொன்னி

* * * *

தற்காலச் சமூக வாழ்க்கைச் சித்திரம் ஒன்றைச் சித்திரித்திருக்கின்றார். நல்ல தமிழ்நடை; சுவை நிறைந்த கதை. புத்தகத்துக்குப் பொருள் பொதிந்த பெயர். —கல்கி

* * * *

## மொழிநூல்

The author has taken great pains to collect information from various sources and has expressed them so lucidly that readers may not find any difficulty in understanding the subject and consequently he deserves the gratitude of all who are interested in the progress of Tamil. —*The Hindu*

**விடுதலையா ?**

......a collection of short stories opens with a fine portrait of a venerable lady, full of affection and age. The members of her family who have all been nourished by her protecting love have to stand by helpless and see her fall a victim to decrepitude. The stages by which the lady is reduced to a miserable wreck are touched upon with rare insight by the writer. The other five stories take as their theme the plight of the have-nots in society who for no sin of theirs are reduced to lifelong misery. —*The Hindu*

* * * *

***கி. பி. 2000***

It is as an escape from this world of sorrow that the author has conjured up an Utopia in his book " Ki. Pi. 2000. " Therein he has pictured a society where it is the responsibility of the state to cater to all the needs of its citizens. It is a society of community kitchens and schools. Written in an engaging style, the story is but a mirror of the kind of society, which the writer would like to be brought about in our own sphere. It does not seem to be inherently impossible to translate his fine dream into reality. —*The Hindu*

* * * *

How would be the Tamil Nad of 2000 A. D. ? Rather an interesting problem to go into especially for a writer of the stamp of Mr. Varadarajan gifted with a fine imagination. The author weaves his dream of future Tamil Nad and gilds it with all the progressive ideas that animate the heart of the present day youths who are straining at the leash to pull out the present root and branch and remould society on lines they think equitable and enduring. Interesting and instructive too.

—*Free India*

## மு. வ. நூல்கள் ரூ. அ.

செந்தாமரை : காதல் [illegible] எல் [illegible] கும் கற்பனைச் சுவை கனிந்த நாவல். 2 8

கள்ளோ ? காவியமோ ? : இல்வாழ்க்கையில் உள்ள இடர்ப்பாட்டை எடுத்துக் கூறும் கற்பனை. 3 8

பாவை : பாலைவனத்திலும் நீரூற்று விளங்குவதுபோல பாழ்பட்ட சமூகத்திலும் அன்பு வாழ்க்கை உள்ளதெனத் தெளிவிக்கும் புனைகதை. 2 4

விடுதலையா ? : இன்று உள்ள வாழ்க்கைச் சிக்கல்களைப் பற்றிய ஆறு [illegible] 2 8

கி. பி. 2000 : எதிர்காலம் இவ்வாறு [illegible] வாறு என விளக்கும் சிந்தனைக் கனவு. 1 [illegible]

மொழி நூல் : தமிழ்மொழி பற்றிய விரிவான மொழியியல் ஆராய்ச்சி. 5 0

தமிழ் நெஞ்சம் : பழந் தமிழ்ப் புலவர்களின் விழுமிய கருத்துக்களை எடுத்துக் காட்டும் நூல். 2 4

மணல் வீடு : அகப்பொருள் பற்றிய சங்கப் பாடல் சிலவற்றிற்கு எளிய நடையில் விளக்கம். 1 0

அறமும் அரசியலும் : இன்று உள்ள உலக அரசியலில் அறத்திற்கு உள்ள இடமும், அறத்தின் சிறப்பும் பற்றிய ஆராய்ச்சி. 1 12

அன்னைக்கு : பழைய தமிழகத்தின் அனுபவ அறிவுரைகளைப் புதிய தமிழகம் ஏற்றுப் பயன்படும் வகையை விளக்கும் கடிதங்கள். 1 0

காந்தி அண்ணல் : உலகத் தலைவர் காந்தியடிகளின் வாழ்க்கையின் ஒளியைக் காட்டுவது. 1 8

அறிஞர் பெர்னர்ட் ஷா : உலக அறிஞர் ஷாவின் வாழ்க்கைப் போக்கையும் கொள்கைகளையும் கூறுவது. 1 0

திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் : விரைவில் வெளிவரும்.